Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 176 | வெள்ளிக்கிழமை | வைகாசி 06 ஆம் நாள் 21 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 16 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## தொடர்ச்சியாக 14 நாள்கள் நாடு முழுதும் பயணத்தடை

*கோரவுள்ளது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்*

கொழும்பு, மே 21
தொடர்ச்சியாக 14 நாள்கள் நாடு முழுவதும் பயணத்தடைகளை விதிக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை முன்வைக்கவுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் நவிந்த சொய்சா கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார். 15 ➤

## யாழ்ப்பாணத்தில் வயோதிபப் பெண் கொரோனாவால் பலி

யாழ்ப்பாணம், மே 21
கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த வயோதிபப் பெண்ணே உயிரிழந்தவர். அவருக்கு வயது 71. (ம-26)

## கொரோனா வடக்கில் 77

யாழ்ப்பாணம், மே 21
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 62 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 77 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை இன்று (நேற்று) கண்டறியப்பட்டுள் 15 ➤

## தொற்று 3,441 நேற்று

கொழும்பு, மே 21
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை நேற்றும் 3 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. நேற்று 15 ➤

# குறைந்தது இரு வாரங்கள் முழு முடக்கம் வேண்டும்!

## கொரோனாத் தடுப்புச் செயலணி பரிந்துரை



கொழும்பு, மே 21
நாட்டைக் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முழுமையாக முடக்க வேண்டும் என்று கொரோனாத் தடுப்பு செயலணி பரிந்துரைத்துள்ளது. செயலணியின் உறுப்பினரும் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்குமான இராஜாங்க அமைச்சருமான சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே இந்தப் பரிந்துரையை முன்வைத்துள்ளார். 15 ➤

## கொரோனாவால் வவுனியாவில் ஒருவர் பலி

வவுனியா, மே 2
வவுனியா மருத்துவமனையில் கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த 15 ➤

## கோவிட் தொற்று: குருக்கள் மரணம்

யாழ்ப்பாணம், மே 21
யாழ்ப்பாணம் இணுவில் கந்தசுவாமி கோயில் பிரதம குரு கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை 15 ➤

## துறைமுக நகர சட்ட வரைவு நிறைவேற்றம்

- 148 பேர் ஆதரவு
- 59 பேர் எதிர்ப்பு

கொழும்பு, மே 21
இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதாரக் களங்களில் கடும் சர்ச்சைகளை ஏற்படுத்திய 15 ➤

## ஆடைத் தொழிற்சாலை கொத்தணி: 4 கர்ப்பிணித் தாய்மாருக்கு தொற்று

முல்லைத்தீவில் இந்த நிலைமை

முல்லைத்தீவு, மே 21
புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலைக் கொத்தணியால் 4 கர்ப்பிணித் தாய்மார் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஆயிரத்து 424 பேரில் 365 பேருக்கு 15 ➤




## எரியூட்டப்பட்டு சிதைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மே 21
எரியூட்டப்பட்டு உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் கண்டறியப்பட்டுள்ளது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். சுன்னாகம் மயிலங்காடு வைரவர் ஆலயத்துக்கு பின்பாக நேற்றுக் காலை இந்தச் சடலம் மீட்கப்பட்டது. 15 ➤

## கொரோனா விடுதியமைக்க பல்வேறு உதவிகள் தேவை

*முல்லை மருத்துவமனை நிர்வாகத்தால் கோரிக்கை*

யாழ்ப்பாணம், மே 21
முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை கொரோனா விடுதிகள் ஆரம்பிக்கப்படவில்லை. அதனை அமைப்பதற்கு பல்வேறு உதவிப்பொருள்கள் தேவை என்று மாவட்ட மருத்துவமனை நிர்வாகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கடிதம் சுகாதார அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 15 ➤

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அன்று

## பொன்னாலையில் நடப்பட்ட மரக்கன்று அழிக்கப்பட்டது!

**மர்ம நபர்கள் காட்டுமிராண்டித்தனம்!**

யாழ்ப்பாணம், மே 21
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தன்று (மே 18) பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டில் பொன்னாலையில் நடுகை செய்யப் 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமைச்சர் தினேஷுடன் தமிழ் எம்.பிக்கள்

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பேச்சு

**கொழும்பு, மே 21**

**நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவையும் பிரதி வெளிவிவகார அமைச்சர் தாரகவையும் நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.**

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு மனு ஒன்றை பிரதமர் மகிந்த ராஜபக்சவிடம் கையளித்திருந்தனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு முகவரியிட்டு அந்தக் கடிதம் வழங்கப்பட்டபோதும் அதன்பின்னர் எவ்வித முன்னேற்றமும் இல்லாத நிலையில் நேற்று அமைச்சரைச் சந்தித்து கைதிகள் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இந்த விவகாரத்தை விரைவாக கையாள வேண்டும் எனவும் சந்திப்பில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் அனைவரும் வலியுறுத்தினர் என்றும், அது தொடர்பில் கரிசனை எடுக்கப்படும் என அமைச்சர் கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த நவம்பர் மாதம் முகநூல்களில் ஒளிப்படங்களை பகிர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு கடந்த ஆறு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது. கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் மே 18 ஆம் திகதி, முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூர்ந்தமைக்காக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மட்டக்களப்பைச் சேர்ந்த 8 பேரது விடுதலை தொடர்பாகவும் பேசப்பட்டது.

போரில் கொல்லப்பட்ட பொதுமக்களை நினைவுகூருவதற்கு நீதிமன்றங்கள் அனுமதித்திருந்த நிலையிலும்கூட, தமது உறவுகளை நினைவுகூர்ந்தமைக்காக அப்பாவி மக்கள் 8 பேர் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளமை பற்றி அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்களது விடுதலைக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டது.

இந்தச் சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில், சி.சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், விநோதரலிங்கம், கலையரசன், சாணக்கியன் இராசமாணிக்கம், எம்.ஏ.சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், கோ.கருணாகரம், த.சித்தார்த்தன் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன் ஆகியோரும், தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் மனோ கணேசனும், மலையக மக்கள் முன்னணியின் வீ.இராதாகிருஸ்ணனும் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-இ)

## கொரோனாத் தொற்றால் நன்மைகளும் உள்ளன!

### 'ஆசியாவின் எதிர்காலம்' மாநாட்டில் ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு

கொழும்பு, மே 21



கொவிட் 19 தொற்றுநோய் முன்னெப்போதுமில்லாத வகையில் சவால்களை உருவாக்கியுள்ளது. இருப்பினும், சில நேர்மறையான விடயங்களும் வெளிப்பட்டுள்ளன. இலங்கையில், மிகக் குறுகிய காலத்தில் அறிவை மையமாகக் கொண்ட தொழிலாளர்களுக்கு தொலைதூர வேலை இயல்பாக்கப்பட்டுள்ளதுடன், கல்வித் துறை இணைய வழிகளுக்கு மாறியுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாப ராஜபக்ச தெரிவித்தார்.

'ஆசியாவின் எதிர்காலம்' குறித்த 26 ஆவது சர்வதேச இணையவழியிலான மாநாடு ஜப்பானின் டோக்கியோவில் நேற்று நடைபெற்றது. அதில், 'கொவிட் நோய்த் தொற்றுக்குப் பிந்திய யுகத்தை வடிவமைத்தல்: உலகளாவிய மீட்பில் ஆசியாவின் பங்கு' குறித்து உரைாற்றுகையில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்;

தொற்றுநோய் எமது பொதுச் சுகாதார அமைப்பு மற்றும் சுகாதார உட்கட்டமைப்பின் திறனையும் ஆழத்தையும் பரிசோதித்தது. நாம் முன்னேறும்போது தற்போதைய திறன்விருத்தி பெரிதும் வலுப்பெறும். பல துறைகளிலும் புதிய முன்னேற்றங்கள் வேகமெடுத்துள்ளன. மருத்துவத்திலும் மருந்தாக்கத் தொழிற் றுறையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன. இது புதிய தடுப்பூசிகள் உருவாக்கப்பட்ட வேகத்திலும் புதிய சிகிச்சை நெறிமுறைகளை வகுப்பதிலும் பிரதிபலித்தது.

இத்தகைய மாற்றங்கள் ஆசியாவில் எமக்கு மிகவும் முக்கியம். பல ஆசிய நாடுகளின் அபிவிருத்தி உந்துதல் அண்மைய தசாப்தங்களில் மில்லியன் கணக்கானவர்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளது. ஆசியாவின் இளைய தலைமுறையினர் முன்பை விட இப்போது நன்கு படித்தவர்களாகவும், தொழில்நுட்ப ஆர்வலர்களாகவும் உள்ளனர். விரைவான டிஜிட்டல் மயமாக்கல் போன்ற புதிய உலகளாவிய மாற்றங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும், இந்தப் பிராந்தியம் எதிர்காலத்தை அதிக நம்பிக்கையுடன் எதிர்கொள்ள உதவுவதற்கும் அவர்கள் நன்கு தகுதிபெற்றுள்ளனர்.

ஆசியாவின் தலைவர்களாகிய நாம் இந்த போக்குகளை உள்நாட்டில் மட்டுமல்லாமல் பிராந்தியத்திலும் ஊக்குவிக்க வேண்டும். ஆசிய நாடுகள் தொடர்ந்து ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டும். உருவாகிறது புதிய சட்டம் உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்கள் இலங்கையிலிருந்து செயற்பட உதவும் வகையில், மிக வலுவான சூழலை உருவாக்க தனிப்பட்ட தரவு பாதுகாப்பு தொடர்பான சட்டம் உட்பட புதிய சட்டம் வகுக்கப்படுகிறது. இங்கு தலைமையிடமாக உள்ள தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு பூச்சிய வரிக் கொள்கையை ஏற்படுத்துவது உட்பட, அரசு ஏற்கனவே இதற்கு ஆதரவாக பல ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது-என்றார். (கு)

## சட்டமா அதிபராகிறார் சஞ்சய் ராஜரட்ணம்

கொழும்பு, மே 21

சட்ட மா அதிபர் பதவிக்கு, சட்டமா அதிபர் திணைக்கள பதில் சொலிசிட்டர் ஜெனரல் சஞ்சய் ராஜரட்ணம் நியமிக்கப்படவுள்ளார். அதற்கு நாடாளுமன்ற பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்றப் பேரவையில் அவரது பரிந்துரை பரிசீலிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது என்று சபாநாயகர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய சட்டமா அதிபர் டப்புல டி லிவேரா நேற்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும் நிலையில், வெற்றிடமாகும் சட்டமா அதிபர் பதவிக்கு ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரட்ணத்தின் பெயர் முன்மொழியப்பட்டது. சட்டமா அதிபர் நியமனத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சில நாள்களில் வழங்குவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரட்ணம் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் மிக மூத்த அதிகாரியாக உள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதி உயர் பதவி வகிப்பவராகவும், நாட்டின் பிரதம சட்ட ஆலோசகராகவும் திகழ்பவர் சட்டமா அதிபர் ஆவார்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது தந்தை சிவா ராஜரட்ணம் புகழ்பூத்த மூத்த சட்டவழக்கறிஞராக விளங்கியவர். இவரது தாத்தாவும் ஒரு முடிக்குரிய சட்டவழக்கறிஞராகப் (Crown Protector) பணி புரிந்தவர்.

சஞ்சய் ராஜரட்ணம், குயின்ஸ் மேரி லண்டன் பல்கலைக் கழகத்தில் சட்டமுதுமாணியில் சிறப்புத் தேர்ச்சிபெற்றுள்ளார். இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பகுதிகளின் சொலிசிற்றராகவும் சத்தியப்பிரமாணம் பெற்றுள்ளார். இவர் 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதியன்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதியாக தன் பணியை ஆரம்பித்தார். பின்னர் மூத்த அரச சட்டவாதி, பிரதி மன்றாடியார் நாயகம், மேலதிக மன்றாடியார் நாயகம் ஆகிய பதவிகளை வகித்து தற்போது பதில் சொலிசிற்றர் ஜெனரல் எனும் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (த-இ)

## சபைக்கு வருகிறார் ரணில்

கொழும்பு, மே 21

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் பெயரிடப்படவுள்ளார் என்று அந்தக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நேற்று ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது மேற்குறித்த இணக்கப்பாடு காணப்பட்டிருக்கிறது என்று கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலில், எந்தவோர் ஆசனத்தையும் ஐக்கிய தேசியக் கட்சி வென்றிராதபோதும், மொத்த வாக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஒரு தேசியப்பட்டியல் உறுப்புரிமை அந்தக் கட்சிக்குக் கிடைத்திருந்தது. எனினும், அதற்கான உறுப்பினர் யார் என்று இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. (த-இ)

## கள்ளுத் தவறணைகளை நிபந்தனையுடன் திறக்கலாம்

### மாவட்டச் செயலர் அனுமதித்துள்ளாரென சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

பளை, மே 21

கள் விற்பனை நிலையங்களை நிபந்தனையுடன் திறப்பதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலர் அனுமதி வழங்கியுள்ளார் என்று பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் சு.இராசதுரை தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பிரதமருக்கு எழுதிய கடிதத்துக்கு அமைவாக அங்கிருந்து மாவட்டச் செயலருக்கு வழங்கப்பட்ட அறிவித்தலுக்கமைவாக கள்ளுக் கடைகளைத் திறப்பதற்கு மாவட்டச் செயலர் நேற்று எழுத்து மூலம் அனுமதி வழங்கியுள்ளார் என்று சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

உற்பத்தி செய்யப்படுகின்ற கள் போத்தலில் அடைத்து அல்லது ஏற்கனவே போத்தலில் அடைத்த கள் விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த அறிவித்தல் வடக்கு மாகாணம் முழுவதற்கும் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசியை மாற்றி செலுத்த வேண்டாம்

## சுகாதாரப் பிரிவு ஆலோசனை

**கொழும்பு, மே 21**

**கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான தடுப்பூசியை முதல் தடவை செலுத்திக் கொண்டவர்கள், இரண்டாவது தடவை இன்னொரு தடுப்பூசியைச் செலுத்திக் கொள்ள வேண்டாம் என்று சுகாதாரப் பிரிவு மக்களுக்கு அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம். ஆர்னல்ட் தெரிவிக்கையில்,

முதலாவது தடுப்பூசியாக அஸ்ராஜெனெக்காவைப் பெற்றுக்கொண்டவர்கள், இரண்டாவதாக சைனோஃபோர்ம் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு சுகாதார அமைச்சு பரிந்துரைக்கவில்லை. எனவே முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் தகவலை மறைத்து இரண்டாவதாக சைனோஃபோர்ம் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டாம்.

அதேவேளை கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்- என்றார். (எ-4)

# கொரோனாத் தடுப்பூசி இலங்கையில் தயாரிப்பு

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே 21




கொரோனாத் தொற்றுக்கு எதிரான தடுப்பூசிகளை, இலங்கையில் தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு, அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து தடுப்பூசிகளை இலங்கையில் தயாரிக்கவுள்ளன.

கண்டி பல்லேகெலேப் பகுதியில் அமைந்துள்ள தனியார் மருந்து உற்பத்தி நிறுவன மொன்றுக்கு, தடுப்பூசிகளை உற்பத்தி செய்வதற்கான அனுமதி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-4)




# என் – 95 முகக் கவசமே மிகப் பாதுகாப்பானது

## நிபுணர்கள் தகவல்

கொழும்பு,மே 21

என்.95 முகக்கவசமே பாதுகாப்பு மிக்கது என்று சிறி ஜெயவர்த்தன பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான நீலிகா மளவிகே தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரட்டை முகக்கவசம் அணிவது கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பளிக்கும். அதனால் இரட்டை முகக்கவசம் அணிவதை அனைவரும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். வெறுமனே துணியிலான முகக்கவசத்தை அணிவது பாதுகாப்பு அளிக்காது. என்.95 முகக்கவசம் மிகவும் பாதுகாப்பு மிக்கது. அத்துடன் அறுவை சிகிச்சை முகக்கவசங்களும் இதற்கு ஒத்தான பாதுகாப்பை வழங்கும்- என்றார். (எ-4)

# கொவிஷீல்ட் தடுப்பூசி ஜூனில் கிடைக்கும்

கொழும்பு, மே 21

இலங்கையில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக, முதன்முறையாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட அஸ்ராஜெனகா கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ், எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கைக்குக் கிடைக்கும்.

அதனடிப்படையில் சுமார் 9 இலட்சம் தடுப்பூசிகள், அடுத்த மாதம் இலங்கை எடுத்து வரப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தடுப்பூசியில் முதலாவது டோஸ்ஸை செலுத்தியோருக்கு முன்னுரிமை அடிப்படையில் இரண்டாவது டோஸ் வழங்கப்படும். அதன் பின்னரே எஞ்சியோருக்கு ஏற்றப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)



# 14 மில்லியன் தடுப்பூசி சீனாவிடம் கொள்வனவு

கொழும்பு, மே 21

சீனாவிடமிருந்து 14 மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளைக் கொள்வனவுசெய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கும், சீனத்தூதுவருக்குமிடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள சீனத்தூதரகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அதற்கமைய 3 மில்லியன் தடுப்பூசிகளை ஒரு மாதத்துக்குள் இலங்கைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கொழும்பிலுள்ள சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை சீனாவால் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ள 5 இலட்சம் தடுப்பூசிகள் எதிர்வரும் செவ்வாய்கிழமை இலங்கைக்கு கிடைக்கும் என்றும் சீனத்தூதரகம் தெரிவித்துள்ளது. (எ4)

# 55 வயதானோருக்கு அரசின் விசேட அறிவிப்பு

கொழும்பு, மே 21

கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படும், 55 வயதுக்கு மேற்பட்டோர் உடனடியாக மருத்துவரை நாட வேண்டும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 55 வயதுக்கு மேற்பட்ட எவருக்கேனும் சுவாசப்பிரச்சினை போன்ற கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டால், தாமதிக்காமல் உடனடியாக மருத்துவமனைக்குச் செல்லுங்கள் அல்லது மருத்துவர் ஒருவரிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (எ-4)

# ஆடைத் தொழிற்சாலையில் 398 பேருக்கு தொற்று உறுதி

கொழும்பு, மே 21

தொழிற்சாலையொன்றில் பணியாற்றும் சுமார் 2 ஆயிரம் ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் இதுவரை 398 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்துக்குட்பட்ட துல்ஹிரிய பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலையொன்றில் பணியாற்றும் ஊழியர்களுக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்னும் சிலருக்கான பி.சி.ஆர். முடிவுகள் வெளிவராததால், தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொழிற்சாலையின் சிற்றுண்டிச் சாலையில் பணியாற்றிய ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியான நிலையில், அவர் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து தொழிற்சாலையைத் தற்காலிகமாக மூடுவதற்கு, சுகாதாரத் தரப்பினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-4)

# கர்ப்பிணிகளை வேலைக்கு அழைக்க வேண்டாம்

**தனியார் தொழில் வழங்குநர்களுக்கும் அறிவுறுத்துகிறது அரசு**

கொழும்பு,மே 21

தனியார் துறையில் கடமையாற்றும் கர்ப்பிணிகளை, வேலைக்கு அழைக்க வேண்டாம் என்று தொழில் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் தொழிலாளர் ஆணையாளரான ஜெனரல் பிரபாத் சந்திரகீர்த்தியால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் அடிப்படையில், தனியார் நிறுவனங்களுக்கு இந்தத் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றிலிருந்து கர்ப்பிணிகளைப் பாதுகாக்கும் வகையில், அவர்களை வீட்டில் தங்க அனுமதிக்குமாறும் வலியுறுத்தப் பட்டுள்ளது. (எ-4)

# ஆறு மாவட்டங்களில் 38 பிரிவுகள் விடுவிப்பு

கொழும்பு,மே 21

நாட்டில் 6 மாவட்டங்களில் 38 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக கொழும்பு மாவட்டத்தின் 8 கிராம சேவகர் பிரிவுகளும், கம்பஹா மாவட்டத்தில் 9 கிராம சேவகர் பிரிவுகளும், களுத்துறை மாவட்டத்தின் 16 கிராம சேவகர் பிரிவுகளும், மாத்தளை மாவட்டத்தில் 3 கிராம சேவகர் பிரிவுகளும், நுவரெலியா மாவட்டத்தில் ஒரு கிராம சேவகர் பிரிவும், வவுனியா மாவட்டத்தில் ஒரு கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (எ4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு ஜப்பான் தடை

இலங்கை, பங்களா தேஷ் மற்றும் மாலை தீவு ஆகிய நாடுகளுக்கு, ஜப்பான் பயணத்தடை விதித்துள்ளது.

கொரோனா வைரஸின் மாறுபட்ட திரிபு இந்த நாடுகளில் கண்டறியப் பட்டுள்ளதை அடுத்து இந்தப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை குறிப்பிட்ட நாடுகளிலிருந்து ஜப்பானுக்கு வரும் பயணிகள் கட்டாயம் விடுதிகளில் தம்மைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஜப்பான் அறிவித்துள்ளது. (எ-4)

# பரிசோதனைக்கு உட்படாத தொற்றாளர்கள் சமூகத்தில்

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு,மே 21**
**பி.சி.ஆர். பரிசோதனைகளை வைத்து தொற்றாளர்களைக் கணக்கிட முடியாது.**

பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாது சமூகத்துக்குள் தொற்றாளர்கள் இருக்கலாம் என்று கொவிட் கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

25 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகளை நடத்தி, சுமார் 2 ஆயிரத்து 300 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று எம்மால் கூற முடியும். ஆனால் பரிசோதனைக்கு உட்படாத தொற்றாளர்களின் எண்ணிக்கையை எம்மால் கணக்கிட முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# மட்டு.சிறைச்சாலையில் 44 பேருக்கு கொரோனா



கொழும்பு, மே 21
மட்டக்களப்பு சிறைச்சாலையில் ஒரே நாளில், 44 கைதிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருவர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டதை அடுத்து , சிறைக்கைதிகள் 62 பேருக்கு நேற்றுமுன்தினம் அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 44 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இவர்களுடன் நேரடித் தொடர்புடையவர்களையும், சிறைச்சாலையில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# பி.சி.ஆர்.சோதனையின் தரம் சுகாதார அமைச்சால் ஆய்வு



கொழும்பு, மே 21
தனியாரால் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் தரம் மற்றும் கட்டணம் தொடர்பில் ஆராய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் மருத்துவ சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜீ.விஜேசூரிய தெரிவிக்கையில்,

ஒரு பி.சி.ஆர். இயந்திரத்தின் மூலம் நாளொன்றுக்கு ஆயிரத்து 500 பரிசோதனைகளையே முன்னெடுக்க முடியும். எனினும் சில தனியார் பிரிவுகளில் 5 ஆயிரம் தொடக்கம் 7 ஆயிரம் வரையான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் பரிசோதனையின் தரம் தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்த வாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து அது தொடர்பில் கலந்துரையாடி, சுற்றறிக்கையை வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் தனியார் பிரிவுகளில் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கான கட்டணம் தொடர்பிலும் சுற்றறிக்கை வெளியிடப்படும் - என்றார். (எ-4)

# சுதர்ஷனிக்கு மன அழுத்தம்

### சொல்கிறார் ஜோன்ஸ்டன்



கொழும்பு,மே 21
இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, தற்போது மன அழுத்தத்தில் இருப்பதன் காரணமாகவே, கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவுசெய்ய நிதி உதவியைக் கோரியுள்ளார் என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி மிகவும் உணர்வுபூர்வமான கதையைப் பேசுகின்றார். இதன் மூலம் அவர் அதிகமான மனஅழுத்தத்தில் இருக்கின்றார் என்பது தெரிகிறது.

சாதாரணமாக இப்படியான பிரச்சினைகள் ஏற்படும் போது, மக்களின் ஒத்துழைப்பைப் பெறவும், மக்களுக்கு விழிப்பூட்டவும், தெளிவுபடுத்தவும் இப்படியான கதைகளைக் கூறுவார்கள்.

அமைச்சர்கள் ஒலிவாங்கியைப் பிடித்தால் இப்படியான கதைகளை கூறுவார்கள். அரசிடம் நிதிப் பிரச்சினையில்லை என்பதை நான் மிகவும் பொறுப்புடன் கூறுகிறேன் - என்றார். (எ-4)

# சிறைக் கைதிகளுக்கு பணம் வைப்பிலிடலாம்


கொழும்பு, மே 21
சிறையிலுள்ள கைதிகளுக்கு, அவர்களின் உறவினர்கள், சிறைச்சாலைகளிலுள்ள சிற்றுண்டிச்சாலைகளில் பணத்தை வைப்புச்செய்ய முடியும் என்று சிறைசாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலானது தீவிரமடைந்துள்ளதால், கைதிகளைப் பார்வையிடுவதற்கு தற்காலிகமாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எனினும் உறவினர்கள் 2 ஆயிரம் ரூபாவுக்கு மேலான பணத்தை வைப்புசெய்வதன் மூலம், கைதிகள் சிறைச்சாலைகளிலுள்ள சிற்றுண்டிச்சாலைகளில் தமக்குத் தேவையான உணவு மற்றும் சுகாதார உற்பத்திகளைக் கொள்வனவுசெய்ய முடியும்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு இந்தச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி வரை உறவினர்கள் பணத்தை வைப்புசெய்ய முடியும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-4)



# ஒரே நாளில் 493 பேர் கைது

கொழும்பு,மே 21
தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில், நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 493 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைவாக இதுவரை 10 ஆயிரத்து 906 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சரியான முறையில் முகக்கவசம் அணியாமை மற்றும் மாகாண எல்லைகளைக் கடந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் அதிகளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# தொற்றைத் தடுக்காவிடில் பேரழிவு நிச்சயம் நடக்கும்

### தொற்றுநோய்ப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே 21
நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவல் நிலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே சுகாதாரத் தரப்பினர் இதனைக் கட்டுப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் துரித கதியில் முன்னெடுக்க வேண்டும். இல்லையெனில் பேரழிவு ஏற்படுவதை எவராலும் தடுக்க முடியாது.

இவ்வாறு தேசிய தொற்றுநோயியல் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்கிரம எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அனைத்துத் தரப்பினரும் இணைந்து இந்த வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடின், இது மிகப்பெரும் பேரழிவை நோக்கி நகரும். உரிய நேரத்தில், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின், ஒரு மாதத்துக்குள் அல்லது 3 வாரங்களுக்குள், பயங்கரமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் - என்றார்.

அதேவேளை கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியை ஏற்றிக் கொண்டவுடனேயே, அதிலிருந்து பாதுகாப்புக் கிடைத்துவிடாது என்று சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிர் கொல்லிகள் மற்றும் மூலக்கூறு அறிவியல் ஆய்வு பிரிவின் பேராசிரியர் நீலிகா மளவிலகே தெரிவித்துள்ளார். (எ-4)

# சுப்பர் மார்க்கெட்டுக்கள் பொலிஸ் கண்காணிப்பில்



கொழும்பு,மே 21
மேல் மாகாணத்திலுள்ள சுப்பர் மார்க்கெட்டுக்கள் மற்றும் உணவகங்களில் வாடிக்கையாளர்கள் அதிகம் கூடுவதால், பொலிஸார் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இவற்றில் தனிமைப்படுத்தல் சட்டங்களையும், சுகாதார வழிகாட்டல்களையும் பின்பற்றத் தவறுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த இடங்களில் வாடிக்கையாளர்களும், பணியாளர்களும் கட்டாயம் முகக்கவசங்களை அணிந்திருக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (எ- 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## யார் பிரிவினைவாதிகள்?

இந்த நாட்டில் மே 18 வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள். தமிழர்களின் ஆன்மாவில் ஆழமாகப் பதிந்த வலி சுமந்த நாள். இந்த நாட்டில் பிரிவினைவாதத்துக்கு முடிவுகட்டுகின்றோம் என்று சிங்கள அரசுகள் ஆரம்பித்த ஆயுதப் போர் முற்றுக்கு வந்த நாள்.

அதேநாள், அன்று முள்ளிவாய்க்காலில் பிரிவினைவாதத்தை-தனி நாட்டுக் கோரிக்கையை முடித்து வைத்தவர்கள் தாம் என்று கொக்கரிக்கும் இன்று ஆட்சிப்பீடத்தில் இருக்கும் ராஜபக்சக்கள் நாட்டில் புதிதானதோர் பிரிவினைவாதத்தை - தனி நாட்டை - சீனக் கொலனியை அமைக்கும் முயற்சிக்கு நீதிமன்றம் தடை போட்ட நாள்.

வாழ்க்கை ஒரு வட்டம் என்பதைப்போல தமிழர்களின் தனி நாட்டுக் கோரிக்கைக்கு முடிவு கட்டிய ராஜபக்சக்கள், தாமே சீனாவுக்கு தனி நாட்டை அமைத்துக் கொடுப்பதற்கான சட்டவரைவை முன்வைத்தனர். நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக சில விடயங்கள் கட்டுப்படுத்தப்பட்டாலும், ராஜபக்சக்கள் தாம் நினைத்ததை நிறைவேற்றி முடித்துள்ளனர்.

கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள துறைமுக நகருக்கான பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளனர். 89 மேலதிக வாக்குகளால் அது நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்டவரைவுக்கு ஆதரவாக 148 வாக்குகளும் எதிராக 59 வாக்குகளும் பதிவாகின. இங்கு ராஜபக்ச அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் சறுகிப்போனதும், ராஜபக்சக்கள் அணி தேய்ந்து வருவதும் அம்பலமாகியது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த இலங்கைத் தீவின் தேச பக்தர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ராஜபக்சக்களும், அவர்களின் எடுபிடிகளும் மக்கள் முன்பாக குறிப்பாக சிங்கள மக்கள் முன்பாக அம்மணமாகி நிற்கின்றனர்.

இலங்கைத் தீவில் இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான, நியாயமான தீர்வுக்காக தமிழ் மக்கள் விட்டுக்கொடுப்புக்களைச் செய்துள்ளனர். தமிழ் மக்களின் ஆகக் குறைந்த அடிப்படைத் தீர்வைக்கூட பிரிவினைவாதம் என்றும் தனி நாடு என்றும் சிங்கள மக்கள் மத்தியில் சித்தரித்து தங்கள் இனவாதக் கூக்குரல்களைக் கிளப்பி, அத்தகைய தீர்வைக் கூட நாசமாக்கியவர்கள் ராஜபக்சக்கள்தான்.

நல்லாட்சி அரசின் காலத்தில் தற்போதுள்ள மாகாண சபை முறைமையை விட மேம்பட்ட தீர்வை நோக்கிய பயணத்தைக் குழப்பியடித்து சிங்கள மக்களை உசுப்பேத்தியவர்கள் இந்த ராஜபக்சக்கள். சுதந்திரத்துக்கு முன்னதாக சிங்களத் தலைவர்கள் முன்வைத்த சமஷடித் தீர்வைக் கூட இப்போதைய ராஜபக்சக்கள் தனி நாடு என்றும் பிரிவினை என்றும் அர்த்தப்படுத்தி சிங்கள மக்கள் மத்தியில் கிலேசத்தை ஏற்படுத்தியிருந்தார்கள்.

இலங்கைத் தீவை காக்கும் தேசத்தின் காவலர்கள் என்று தங்களைத் தாங்களே புகழாரம் சூட்டி மகிழ்ந்தார்கள் ராஜபக்சக்கள். ஆனால் இன்று நடந்தது என்ன?

இந்த நாட்டின் இறைமையை சீனாவிடம் அடகு வைத்தவர்கள் ராஜபக்சக்கள். இந்த நாட்டில் புதியதோர் நாடு முளைப்பதற்கு நாடாளுமன்றில் கை உயர்த்தியவர்கள் ராஜபக்சக்கள். நாட்டைப் பிரித்துக் கொடுத்தவர்கள் ராஜபக்சக்கள்.

எந்தத் தமிழ் மக்களையும் அவர் தம் பிரதிநிதிகளையும் பிரிவினைவாதிகள் என்றும், நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்றும், தனி நாடு கோருபவர்கள் என்றும் சிங்கள மக்கள் மத்தியில் ராஜபக்சக்கள் அடையாளப்படுத்தியிருந்தனரோ, அந்தத் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் இலங்கையில் உருவாக்கப்படும் சீனக் கொலனிக்கு எதிராக, தனி நாட்டுக்கு எதிராக, பிரிவினைக்கு எதிராக வாக்களித்திருக்கின்றார்கள்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தனித் தேசமாக வாழவே விரும்புகின்றோம் என்று சொல்வதைச் செயலில் காட்டியிருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பவை துறைமுகர் பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவுக்கு எதிராக வாக்களித்திருந்தன.

நாட்டைப் பிரிக்க முற்படுவது யார் என்ற உண்மையை சிங்கள மக்கள் இனியாவது உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்களின் அபிலாசைகளை புரிந்துகொள்ள வேண்டும். தமது தேசத்தில் தம்மை ஆளும் சுயநிர்ணய உரித்தைத்தான் தமிழர்கள் கோருகின்றார்கள் என்ற உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும்.




# நிலைமையின் தீவிரத்தை அறியாது மக்கள் கட்டுப்பாட்டில் அலட்சியம்

## யாழ். மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், மே 21**

**யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று வீதம் அதிகரித்துள்ளது. ஆனால் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதில் அலட்சியம் காட்டுவதை அவதானிக்க முடிகின்றது. மக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது அவசியம்.**



இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.
நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:
நாம் அனைவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் மிகுந்த விழிப்புடன் செயற்பட வேண்டும். மக்களைத் தொற்றில் இருந்து பாதுகாக்கவே பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள் விதிக்கப் படுகின்றன. ஆனால் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் அலட்சியம் காட்டுவதை அவதானிக்க முடிகின்றது.
தற்போதுள்ள நிலைமையை சுகாதாரக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்தாலே தவிர்க்க முடியும். மிகமிக அத்தியாவசிய தேவைக்கும், அலுவலகக் கடமைக்கும் மட்டுமே மக்கள் நடமாட வேண்டும். தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும். அனைவரது ஒத்துழைப்பும் கிடைத்தால் மட்டுமே இந்த நிலைமையை -இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார். (எ-26)

# வீதியில் நின்ற தொற்றாளர்; தெறித்தோடிய பொதுமக்கள்

சாவகச்சேரி, மே 21
தொற்று அடையாளம் காணப்பட்ட நபர் வீதியோரத்தில் உள்ள வீட்டு வாசலில் நின்றதால் அந்த வீதியில் பயணிக்க அச்சம் கொண்ட பொதுமக்கள் வேறு வீதிகளைப் பயன்படுத்தினர்.
சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள ஒருவரே தொற்றுடன் வீதியில் காணப்பட்டுள்ளார். இவர் வீதியில் காண்பவர்களுடன் கதைக்கின்றார் எனவும், இதனால் அந்த வீதியில் சென்ற பொதுமக்கள் வேறு வீதியைப் பயன்படுத்தி செல்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக சாவகச்சேரி சுகாதார பகுதியினருடன் தொடர்புகொண்டு கேட்ட போது,
கொரோனாத் தொற்று ஏற்பட்ட குறித்த நபரை வீட்டில் இருக்குமாறு கூறியுள்ளோம். அவரை சிகிச்சை நிலையத்துக்கு ஏற்றிச்செல்வதற்கு வாகனத்தை எதிர்பார்த்துள்ளோம் எனத் தெரிவித்தனர். (ஐ-9)

# முஜிபுர் ரஹ்மான் எம்.பிக்கும் கொரோனாத் தொற்று உறுதி

கொழும்பு, மே 21
ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானுக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ரமேஸுக்கு நேற்று முன் தினம் தொற்று உறுதிப்படுத்தப் பட்டிருந்தது.
இந்நிலையில் இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினரும் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாந்தை கிழக்கின் கால்நடைகளை

# மேய்ச்சலுக்கு வெளி இடங்களுக்கு கொண்டுசெல்ல அனுமதியில்லை

முல்லைத்தீவு,மே 21

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்காக வெளியிடங்களுக்கு கொண்டு செல்வதற்கான அனுமதிகள் கிடைக்கப் பெற வில்லை என்று மாந்தை கிழக்கின் கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

வவுனிக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை தற்போது நடைபெற்று வரும் நிலையில் கடந்த காலங்களில் கால்நடைகளை மன்னாரின் மாந்தை மேற்கின் வெள்ளாங்குளம் மற்றும் மூன்றாம் பிட்டி ஆகிய பகுதிகளில் மேய்ச்சலில் ஈடுபடுத்துவது வழக்கம்.

ஆனால் தற்போது சிறுபோக நெற்செய்கை நடைபெற்று வரும் நிலையில் வெளியிடங்களுக்கு கால்நடைகளை கொண்டு சென்று மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்கான அனுமதி கிடைக்காததன் காரணமாக கால்நடை வளர்ப்பாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக அவை பயிர்ச்செய்கை நிலங்களுக்குள் செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

மாந்தை கிழக்கில் நூற்றுக்கணக்கான கால்நடைகள் உள்ள போதிலும் மேய்ச்சல் தரவைகள் இல்லாததன் காரணமாக கால்நடை வளர்ப்பு நெருக்கடியான நிலைமையுடன் காணப்படுகின்றது. இந்நிலையில் கால்நடைகளை வெளியிடங்களுக்குக் கொண்டு சென்று மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்கான அனுமதியை விரைவாக அதிகாரிகள் பெற்றுத்தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர்.

(ஐ-13)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் · 24 · 03 · 1940



இறைவன் அடியில் · 21 · 04 · 2021

**LATE MR.RATNALINGAM (P.H.I) SHANMUGALINGAM**
**PORT CARGO CORPORATION - COLOMBO**
**OLD STUDENT OF ST. PATRICKS COLLEGE-JAFFNA.**

தனது சிறு வயது முதல் முருகக் க்டவுள் மீது மிகுந்த பக்தி கொண்டவர். நல்லூர் கந்த சுவாமி கோயில் திருவிழாக் காலங்களில் முருகப் பெருமான் வீதி வலம் வரும் அழகிய காட்சியைத் தனது நல்லூர் வீட்டு வாசலில் நின்று களிக்கும் பேற்றினை பெற்றிருந்தார்.

யோகசுவாமியைத் தனது எட்டாவது வயதிலிருந்து பெற்றோருடன் சென்று தரிசித்து வந்தவர். இளம் பராயத்தில் ஒரு முறை சென்றபோது சுவாமி தனது அருகே அழைத்து "உனக்கு என்ன வேண்டும் நிதானமாகக் கேள்" என்று கேட்க, அவரது அருட் பார்வையால் தனது இரு கண்களிலிருந்து கண்ணீர் சொரிய எதையுமே விரும்பிக் கேட்காது நிற்க, "நான் அவனுக்கு (ஆண்டவனுக்கு) எல்லாம் எழுதுகின்றேன் நீ போ" எனத் தனது காதுக்குள் கூறி முதுகில் தட்டி வழியனுப்பிய நிகழ்வை உற்றவர்களுக்கு கூறுவதுடன் கண்ணால் கண்ட கடவுள் சுவாமி என வழிபட்டு வந்தவர்.

யாழ் சிவதொண்டன் நிலையத்தில் நடைபெறும் ஆயிலிய பூசையில் கலந்து கொள்வதற்காக ஒவ்வொரு மாதமும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தனது இறுதிக்காலம் வரை சென்று வந்தவர்.

மேலும் பகவான் ரமண மகரிஷி, சத்திய சாயி பாபா மீது அதி தீவிர பக்தி கொண்டவர். நாம் இரு வருடங்களுக்கொருமுறை மூன்று தடவைகள் இந்தியா சென்று திருவண்ணாமலையிலும் புட்டபர்த்தியிலும் சிறிது காலம் தங்கியிருந்து வழிபாடுகளில் கலந்து கொண்டதில் பூரண திருப்தியடைந்திருந்தார்.

எங்கள் அருமைப் புத்திரி சஹானாவின் இறப்பு எமது வாழ்க்கையில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

எனது சகோதரர்கள், பிள்ளைகள், தனது சகோதரி, பிள்ளைகள் எல்லோரிடமும் மிகுந்த பாசத்துடன் பழகி அவர்களின் தேவைகளை அவ்வப்போது தயங்காது நிறைவேற்றி வைத்த உங்கள் அன்பு மிகுந்த உள்ளத்தை நினைத்து தாங்கமுடியாத ஆழ்ந்த துயரத்தில் துவழ்கின்றனர்.

மேலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்களைக் காணும் போது உங்கள் இயல்பான சிரித்த முகத்துடன் அன்பாகப் பண்பாகப் பேசிச் செல்வதை நினைவு கூர்ந்து கவலையடைகின்றனர்.

தான் சிறுவயது முதல் உயர்தர வகுப்பு (A/L) வரை கல்வி கற்ற (St Patricks College) கல்லூரியிலேயே தனது தந்தை, தந்தையின் தகப்பனார், தனது தாயின் தகப்பனார், தாய்மாமன்மார் எல்லோரும் கல்வி கற்றதாகவும், தன்னைக் கற்பித்த ஆசிரியர்களின் அன்பையும் ஆளுமையையும் புகழ்ந்து கூறுவார்.

யோக சுவாமியின் ஆயிலிய பூசையன்று, இராம நவமித் திதியில் கதைத்தபடியே எங்களின் கண்முன்னே வீட்டில் இறை நாமங்களுடன் அவருடைய இன்னுயிர் இறைவனடி சேர்ந்தது.

எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கி வந்த உங்கள் உருவத்தை நிழற்படத்தில் பார்க்கவும் மனம் விரும்பாது கண்ணீர் பெருக நெஞ்சு படபடக்க செய்வதறியாது தவித்து நிற்கின்றேன்.

அவரின் பிரிவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், A.F.RAYMONDS BORELLA மலர்ச் சாலைக்கு வருகை தந்தவர்களுக்கும் மலர் வளையங்கள் சாத்தியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றியவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மனைவி - அன்னறாணி சண்முகலிங்கம்**
**(ஓய்வுபெற்ற ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி)**
**30, 4/1, NELSON PLACE, WELLAWATTE.**
**0112 360 685**



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 21.04.2021 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**தம்பையா சுந்தரலிங்கம்**

அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலியும், ஆத்ம சாந்தி பிரார்த்தனை நிகழ்வும் இன்று (21.05.2021) வெள்ளிக்கிழமை உரும்பிராய் தெற்கு ஞானவைரவர் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் இறுதிக் கிரியைகளில் நேரடியாகவும், தொலைபேசி வாயிலாகவும் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(கொரோணா தொற்று காரணமாக நிகழ்வு குடும்ப உறவினர்களுடன் மாத்திரம் நடைபெறுகிறது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிறப்பு 1948.09.22 — இறப்பு 2021.04.21

குடும்பத்தினர்
ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் தெற்கு



## மரண அறிவித்தல்

தோற்றம் · 30 · 09 · 1950



மறைவு · 20 · 05 · 2021

**இந்திராணி மாணிக்கலிங்கம்**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இந்திராணி மாணிக்கலிங்கம் அவர்கள் நேற்று (20.05.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், தர்மினி (ஆசிரியர், யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி), குமரேஷ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தினேஸ் (ஆசிரியர், யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்), வினோதினி (கனடா) ஆகியோரின் மாமியாரும், பேருஜன், ரேஷ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பாலேந்திரன், கௌரிதேவி, விஜயராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், படிகலிங்கம், இரட்ணலிங்கம், கணேஸ்வரி, சர்வேஸ்வரி, லிங்கேஸ்வரி, நிர்மலேஸ்வரி, பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2021) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 11.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

586/3, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5800

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய பக்தர்களுக்கான அறிவித்தல்..!!

கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தில் வருடாந்தம் இடம்பெறுகின்ற வேள்வி பொங்கல் விழாவுக்கான விளக்கு வைத்தல் உற்சவம் எதிர்வரும் 21ம் திகதி வெள்ளிக் கிழமையும், வேள்வி பொங்கல் விழா எதிர்வரும் 29ம் திகதி சனிக்கிழமையும், எட்டாம் மடை பொங்கல் உற்சவம் எதிர்வரும் 04ம் திகதி வெள்ளிக்கிழமையும் இடம்பெறவுள்ள நிலையில், நாட்டில் தற்போது இருக்கின்ற கொவிட்-19 அசாதாரண சூழ்நிலை காரணமாக பக்தர்கள் எவருக்கும் மேற்குறித்த உற்சவங்களில் பங்குபற்றுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

குறிப்பு:- வேள்வி பொங்கல் விழா நடைபெறும் தினத்திலோ, எட்டாம் மடை பொங்கல் நடைபெறும் தினத்திலோ பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தருவதையோ, நேர்த்திக் கடமைகளுக்காக கிடாய்கள், சேவல்கள் போன்றவற்றை ஆலய வளாகத்துக்குள் கொண்டுவருவதையோ, பொங்கல் மடை பரவுதலில் ஈடுபடுவதையோ தயவுகூர்ந்து தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

- தர்மகர்த்தா -


# சஹ்ரானின் தகவல்கள் 2 வருடங்களாக மறைப்பு

## காவிந்த எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு,மே 21

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களின் சூத்திரதாரியான சஹ்ரான் ஹசீம் தொடர்பான கோப்புக்களை சட்ட மா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றும் அதிகாரி ஒருவர், இரண்டு வருடங்களாக மறைத்து வைத்திருந்தார் என்று அறிந்துள்ளோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நௌபர் மௌலவியே ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யென்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறுகின்றார். இந்த விசாரணைகள் இன்னும் நிறைவடையாத நிலையில், இதன் சூத்திரதாரி நௌபர் மௌலவி என்று சரத் வீரசேகர கூறுவதில் எமக்கு சந்தேகம் இருக்கின்றது.

சஹ்ரானைக் கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டு இருந்தது. ஆனால், அவர் கைது செய்யப்படவில்லை எனவும் சரத் வீரசேகர கூறியுள்ளார். என்றார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் அலி சப்ரி, கடந்த வருடமே நான் நாடாளுமன்றுக்கு வந்தேன். நீங்கள் கூறும் சம்பவங்கள் இடம்பெற்ற காலத்தில், எமக்கு எந்தவிதமான தொடர்புகளும் இல்லை. சட்ட மா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகளில் நான் நேரடியாகத் தலையீடு செய்வதில்லை. என்றார். (எ-4)


## VACANCY

ASST.BRANCH OPERATIONS (JAFFNA) – MALE/FEMALE

Vacancies- 02

**Requirements**

- Completion of GCE O/L is a minimum requirement.
- Age should be below 25yrs.
- Good computer skills.
- Good communication skills in English is necessary
- Possess a valid bike license.

Send your CV within 10 days of this advertisement to:
nafais@tradefirst.lk

TRADEFIRST (PVT) LTD.
www.tradefirst.lk


## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மதியாபரணம் மதிவதனன்**
(கரைத்துறைப் பற்று பிரதேச சபை)
திதி : தசமி (21.05.2021)

மலர்வு 31 . 07 . 1974
உதிர்வு 20 . 05 . 2013

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய் நின்று
பாசத்துடன் எமை வாழ்வித்த எம் குடும்ப விளக்கே!
ஆறாத் துயரில் மூழ்கி எட்டாண்டுகள் சென்றதுவோ
மீள முடியவில்லை எம் குடும்ப விளக்கே
விழி நீர் சொரிய கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி
போற்றி வணங்குகின்றோம் எம் அன்புத் தெய்வமே!

குடும்பத்தினர்.

இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, மகள், அத்தான்,
அக்கா, மருமக்கள்மார்.

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 . 10 . 1972
மறைவு 22 . 05 . 2012



**செல்லத்துரை டேமியன்**
(யாழ் பல நோக்கு சங்க கிளை முகாமையாளர்)

ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
மாறாது உன் நினைவுகள்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அந்திரான்
சண்டிலிப்பாய்

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


## VIRTUAL INTERVIEW [VIA ZOOM]

**This is Public Health [TIPH] Global Grant Program**
**Faculty of Medicine, University of Jaffna**
**Vacant: Post of Public Health Networking Person- Full Time, on Contract Basis**

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA has been selected as an awardee for ***This isPublic Health [TIPH] Global Grant Program,*** awarded by the Association of Schools and Programs of Public Health (ASPPH)

The TIPH Global Grant Program seeks to build on the success of the original TIPH campaign and increase the visibility of public health around the world

**Required qualifications and experience:**
**Requirements:**
- A medical graduate (including the medical graduate from a UGC recognised foreign medical schools)
- Having experience in public health is an advantage

Remuneration: A monthly salary of LKR 60,000.00 inclusive of CLA and Appointee will contribute 8% of his/ her salary towards the Employee's Provident Fund and the employer will contribute 12% of his/ her salary towards Employees' Provident Fund and 3% towards Employee's Trust Fund.

**General Conditions:**
- Should be a citizen of Sri Lanka
- Age should be below 45 years on the date of closing application.

**Professional competencies required:**
- High level of proficiency in written and spoken English, Sinhala and Tamil
- Should have adequate knowledge and skills in handling IT related activities including managing websites and social media
- Ability to communicate effectively in Tamil, Sinhala and in English with officials and different stake holders including local public health experts
- Ability to function effectively in a team environment inspiring trust and cooperation of other team members.
- Ability to achieve the targets in time align plan.

Eligible candidates are requested to send their application [downloaded from University Website] to dcfm@univ.jfn.ac.lkon or before 01.06.2021.

Incomplete and Illegible applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for interview via zoom (due to the COVID 19 pandemic situation). Zoom Link will be sent to the short listed applicants via email.
For further details please refer the University of Jaffna website www.jfn.ac.lk

**Registrar**
**University of Jaffna**


## கண்ணீர் அஞ்சலி

**சிவஸ்ரீ நடராஜக் குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள்**

தோற்றம் 24 . 07 . 1944
மறைவு 19 . 05 . 2021



உடுவில் கற்பகப் பிள்ளையார் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்கள் நேற்று முன்தினம் (19.05.2021) புதன் கிழமை சிவபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உடுவில் கற்பகப் பிள்ளையார் கோவில்
பரிபாலன சபையினரும்,
ஊர்வாழ் மக்களும்

## மரண அறிவித்தல்

**வேலுப்பிள்ளை பாலசிங்கம்**



யாழ். தெல்லிப்பழை நாமகள் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பாலசிங்கம் அவர்கள் 19.05.2021 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சந்திரா அவர்களின் அன்புக் கணவரும், ஜெசிந்தா (சுவிஸ்), தர்மினி, வனஜா, ஜெயக்குமார் (Qatar), ஜெயராஜ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அம்பிகைபாகன், சுஜீவன், சத்தியரூபன், றொசானி, யமுனா ஆகியோரின் அன்பு மாமனாரும், தாரகன், பிரசாத், கர்னிகா, சபரிஸ், கிரன்யா, டினுசன் ஆகியோரின் அன்புப் பேரனும், வேலன் சின்னக்குட்டி ஆகியோரின் மகனும் கந்தையா இராமநாதன் முருகையா சின்னம்மா புஸ்பவதி ஆகியோரின் சகோதரனும் இராசையா சிவக்கொழுந்து இந்திரா துரைசேகரம் ஞானசேகரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை பிரதேச சபையின் பெண் உறுப்பினர் கடத்தல்

## சக உறுப்பினர் குற்றச்சாட்டு

**முல்லைத்தீவு,மே 21**
**மாந்தை மேற்கு பிரதேச சபையின் சக பெண் உறுப்பினர் ஒருவர் கடத்தப் பட்டுள்ளார் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மாந்தை மேற்கு பிரதேச சபையின் பெண் உறுப்பினர் என்.ரம்சியா குற்றம் சுமத்தியுள்ளார்.**

மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைவர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். இதனைய டுத்து புதிய தலைவருக்கான தெரிவு வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிறைஞ் சன் தலைமையில் நேற்று முன் தினம் மாந்தை மேற்கு பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சக உறுப்பினரான விளாத்திக் குளத் தைச் சேர்ந்த நெசவுநாதன் தவம லர் என்பவரை மாந்தை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் தௌபீக் என்பவர் கடத்தியுள்ளார். குறித்த பெண் உறுப்பினரைத் தேடியும் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவருடைய தொலைபேசி இலக்கம் செயலிழந் துள்ளது. தமது கட்சியின் உறுப்பி னர் ஒருவரை தலைமறைவு செய்யவைத்து, குறித்த வெற்றியை பெற்றுள்ளனர். இதனால் பெண் சமூகத்துக்கத்துக்கான கௌர வத்தை இழந்துள்ளோம். இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவுள்ளேன். என்றார். (எ-4)

# மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு புதிய தவிசாளர்

முல்லைத்தீவு,மே 21
மாந்தை மேற்கு பிரதேச சபை யின் புதிய தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாகப் போட்டியிட்ட இராமநாதன் வவுனியன் ஆதி அருணாசலம் வெற்றி பெற் றுள்ளார்.
மாந்தை மேற்கு பிரதேச சபை யின் தலைவர் தெரிவுக்காக அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் கட்சி சார்பாக இராமநா தன் வவுனியன் ஆதி அருணா சலம் மற்றும் தமிழர் விடுத லைக்கூட்டணி கட்சி சார்பாக விக்கினராசா கயிலைநாதன் ஆகிய இருவருடைய பெயர் கள் பரிந்துரைக்கப்பட்டன.
24 உறுப்பினர்களைக் கொண்ட மாந்தை மேற்குப் பிரதேச சபையில் தலைவர் தெரிவுக்கான வாக்களிப்பின் போது 2 உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. மேலும் ஒரு உறுப்பினர் நடு நிலை வகித்தார்.
ஏனைய 19 உறுப்பினர்களும் பகிரங்க வாக்களிப்பை மேற் கொண்டனர். இதன் போது அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் கட்சி சார்பாகப் போட்டி யிட்ட இராமநாதன் வவுனியன் ஆதி அருணாசலம் 12 வாக்கு களையும், தமிழர் விடுத லைக் கூட்டணி கட்சி சார்பாக போட்டி யிட்ட விக்கினராசா கயிலைநா தன் 9 வாக்குகளையும் பெற் றனர். மேலதிக 3 வாக்குக ளால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பாகப் போட்டியிட்ட இராமநாதன் வவு னியன் ஆதி அருணாசலம் வெற்றி பெற்று மாந்தை மேற்கு பிரதேச சபையின் புதிய தவி சாளராக தெரிவு செய்யப்பட் டார். (எ-4)

# இயற்கை உர உற்பத்திக்கு இளைஞர்களுக்கு அழைப்பு!!

வவுனியா,மே 21
வவுனியா மாவட்டத்துக்கு 27 ஆயிரம் மெற்றிக் தொண்ணுக்கும் அதிகமான இயற்கை உரம் தேவையாக உள்ளது.
அதனை விரைவாக உற்பத்தி செய்ய வேண்டியுள்ளமையால் முயற்சி யாளர்கள் கமநல அபிவிருத்தி திணைக்களங்களை தொடர்புகொள் ளுங்கள் என்று வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் என்.விஸ்னுதா சன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
விவசாயத்துக்கான இராசாயன பசளை மானிய அடிப்படையில் வழங் கப்பட்டு வந்தது.
இதனால் ஏற்பட்ட சிறுநீரக பிரச் சினை, சூழல் பிரச்சினை களை கருத் தில்கொண்டு இராசாயன பசளை களை முற்றுமுழுதாக நிராகரித்து சேதன இயற்கை பசளைகளை உற் பத்திசெய்யும் திட்டத்தை அரசு முன் னெடுத்துள்ளது.
குறிப்பாக இயற்கை பசளையை குறிப் பிட்ட காலத்தில் உற்பத்தி செய்ய முடி யாது. குறைந்தது நான்கு தொடக்கம் ஐந்து மாதங்கள் தேவை. தற்போது எமக்கு இருப்பதும் அந்த காலப்பகு தியே. உற்பத்திசெய்வதற்கான காலம் மிகவும் குறைவாக உள்ளது.
எனவே உற்பத்தியாளர்கள் மற்றும் முயற்சியாளர்கள் விரைவாக அதனை முன்னெடுக்கவேண்டும்.
அதற்கு எமது திணைக்களம் மற்றும் விவசாய அமைச்சின் முழுமையான உதவிகளும் கிடைக்கும். எமது மாவட் டத்தில் இயற்கை உரங்களை தயாரிப் பதற்கான சகல வளங்களும் உள் ளன. ஆனால் உற்பத்தியாளர்களே பற்றாக்குறையாக உள்ளது.
எமது மாவட்டத்தில் 27 ஆயிரம் மெற் றிக்தொண்ணுக்கும் அதிகமான இயற்கை உரம் தேவையாக உள்ளது. இவற்றை பூர்த்திசெய்வதற்கு அதிக மானவர்கள் முன்வரவேண்டும். இல்லா விடில் பசளைதட்டுப்பாடு விளைச்சல் குறைவு போன்ற பிரச்சினைகள் ஏற் படலாம். எனவே இதற்கான திட்ட முன்மொழிவுகளை கமநல அபிவி ருத்தி திணைக்களங்களுக்கு சமர்ப் பித்தால், அதற்குரிய உதவிகள் எங்க ளால் வழங்கப்படும்- என்றார். (ஐ-110)



# யாழ்ப்பாண மாநகர வீதிகளின் சீரமைப்பு தொடர்பில் களப் பயணம்

யாழ்பபாணம், மே 21
ஐ றோட் திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படுகின்ற யாழ்ப் பாண மாநகர வீதிகளின் வேலைத்திட்ட முன்னேற் றங்கள் தொடர்பான கள ஆய்வு ப் பயணம் நேற்று மேற்கொள்ளப்பட்டது.
இக் கள ஆய்வில் யாழ்.மாநகர முதல்வர், பொறி யியலாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் மற்றும் ஐ றோட் திட்ட ஒப்பந்தகாரர்கள் பங்குபற்றினர். தற்போது பிறவுண் வீதியில் வடிகால் நிர்மாண வேலைகள் நடைபெறுகின்றன. குறித்த வேலைகள் நிறைவடையாத காரணத்தால் வீதி அமைக்கும் பணிகள் தாமதமடைகின்றன.
எனவே வீதிக்கு குறுக்காக வடிகால் செல்லும் பகுதி களைத் தவிர்த்து ஏனைய வீதிகளை சீரமைப்பு (காப் பெற் இடும்) செய்யும் வேலைகளை பகுதி பகுதியாக உடன் ஆரம்பிக்குமாறு மாநகர முதல்வர் வி.மணி வண்ணன் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.
அதற்கிணங்க அவ் வேலைத்திட்டங்களை உடன் செய்வதற்கு அவர்களும் உறுதியளித்தனர். (ஐ-20)

# தொடர்ச்சியாக திருட்டுப்போகும் விவசாயிகளின் நீர் பம்பிகள்

## நீர் இன்றி பயிர்கள் அழிவு

கிளிநொச்சி,மே 21
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட திருவையாறு கிராமத்தில் தொடர்ச்சியாக விவசாயி களின் நீர் இறைக்கும் பம்பிகள் திருடப்படும் சம்ப வங்கள் பதிவாகியுள்ளன. இதனால் நீர் இன்றி பல ஏக்கர் பயிர்ச் செய்கைகள் அழிவடைந்துள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
திருவையாறு கிராமத்தில் வசிக்கும் மக்களாகிய நாம் விவசாயத்தையே நம்பி எமது ஜீவனோபாயத்தை மேற் கொண்டு வருகின்றோம். இவ்வாறு பயிர்ச் செய்கை யில் ஈடுபடும் விவசாயிகளின் நீர் இறைக்கும் இயந்தி ரங்கள் கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக திருடப் பட் டுள்ளன. இதனால் விவசாயிகள் பயிர்களுக்கு நீர் இறைப்பதற்கு இயந்திரம் இல்லாமையால் பயிர்கள் அனைத்தும் நீரின்றி அழிவடைந்துள்ளன.
இதுவரை 29 க்கு மேற்பட்ட நீர் இறைக்கும் இயந்தி ரங்கள் திருடப்பட்டுள்ளன. குறித்த விடயம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை- என்றனர். (ஐ-13)

# சாராயப் போத்தல்களுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி,மே 21
கொரோனாத் தொற்றுக் காரணமாக தனி மைப்படுத்தப்பட்ட பகுதிகளில் விற்பனைக்கு கொண்டு சென்ற 100 சாராயப் போத்தல்க ளுடன் சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுந்தி னம் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.
கிளிநொச்சி மது ஒழிப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 250 மில்லி லீற்றர் போத்தல்கள் 100 உடன் ஒரு வர் கைது செய்யப்பட்டுள்ளார் என கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (ஐ-113)

# கொட்டப்படும் கழிவுகளால் வீதிகளில் சுகாதார சீர்கேடு

வவுனியா,மே 21
வவுனியா பெரியார்குளம் வீதியோ ரங்களில் வீசப்படும் கழிவுகளால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதுடன் பொதுமக்கள் பல்வேறு அசௌகரி யங்களுக்கும் உள்ளாகிவருகின் றனர்.
பூந்தோட்டம் பெரியார்குளத்திலிருந்து தாண்டிக்குளம் செல்லும் உள்வீதி ஓரங்களிலேயே அதிகப்படியான கழி வுகள் வீசப்பட்டு வருகின்றன.
வீட்டுக்கழிவுகள், மலக்கழிவுகள், [illegible], என்பனஅப்பகுதி [illegible] வீசப்படுவதால் வீதி எங்கும் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் தொற்று நோய் பரவக்கூடிய அபாய மும் ஏற்பட்டுள்ளது எனறு அப்பகுதி களை சேர்ந்த மக்கள் கவலை தெரி விக்கின்றனர். இது தொடர்பில் உள் ளூராட்சி சபைகள் கவனம் செலுத்தி கழிவு முகாமைத்துவத்தை சரியான முறையில் ஏற்படுத்தவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. கிருஷ்ணபுரம் தொற்று நோய் மருத்துவமனையில் முறைகேடுகள்

## களத்தில் இறங்கியது கணக்காய்வுத் திணைக்களம்

**கிளிநொச்சி, மே 21**

**கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் அமைந்துள்ள வடமாகாண தொற்று நோய் மருத்துவமனையில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்று, அவை தற்போது வட மாகாண கணக்காய்வுத் திணைக்களத்தினரால் விசாரணை செய்யப்பட்டுள்ளன.**

மருத்துவமனை அமைக்கும் காலத்திலிருந்து இன்றுவரை கட்டுமானப் பணிகள், பொருள் கொள்வனவு மற்றும் உணவு வழங்கல் உள்ளிட்ட பல விடயங்களில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளன. மேற்படி முறைகேடுகள் தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு இந்த முறைகேடுகள் தொடர்பில் தேசிய கணக்காய்வு அலுவலகத்துக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. இதனையடுத்து தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற அதேவேளை வடக்கு மாகாண கணக்காய்வுத் திணைக்களம் ஆரம்ப கட்ட கணக்காய்வை மேற்கொண்டு அறிக்கையையும் வடக்கு மாகாண பிரதம செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், உள்ளிட்ட உரிய அதிகாரிகளுக்கு சமர்பித்துள்ளனர்.

தொற்று நோய் மருத்துமனைக்கான நாளாந்த நுகர்வுப் பொருள்கள் கொள்வனவுசெய்யப்பட்டுள்ள போதிலும், அந்த மருத்துவமனையில் பேணப்படும் பொருள் பெறுவனவு ஏட்டின் பிரகாரம் மருத்துவமனையால் பெறப்பட்ட பொருள்களின் எண்ணிக்கைக்கும் கொள்வனவுச் சிட்டையில் காட்டப்பட்ட எண்ணிக்கைக்கும் இடையில் அதிகளவான வேறுபாடுகள் காணப்படுகின்றமை, பொருள் கொள்வனவுச்

சிட்டையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களின் அளவுகள் (கிராம்,கிலோகிராம்) காணப்படாமையால் சிட்டையில் விலை குறிப்பிடப்பட்ட பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டதா என்பதை உறுதி செய்ய முடியாத நிலை, வடக்கு மாகாண வழங்குநர்கள் பதிவேட்டில் 2020ஆம் ஆண்டு பதிவு செய்யப்படாத நிறுவனங்களிடம் பொருள்கள் கொள்வனவில் ஈடுபட்டமை, இவ்வாறு பதிவு செய்யப்படாத ஒரு நிறுவனத்திலிருந்து மட்டுமே 2.6 கோடி ரூபாவுக்கு அதிகமான பொருள்களை 11 தடவைகளில் கொள்வனவு செய்தமை, வாங்கப்பட்ட பொருளின் மேல் குறிக்கப்பட்ட விலைக்கும் பொருள்கொள்வனவுச் சிட்டையில் அப்பொருளுக்கு இடப்பட்டுள்ள விலைக்கும் இடையிலான வேறுபாடுகள் மற்றும் இவ்வகையில் பல லட்சக்கணக்கில் மேலதிக பணம் செலுத்தப்பட்டுள்ளமை, பொருள் கொள்வனவு ஒன்றுக்காக கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிமனையால் கேள்வி ஆவணங்கள் வழங்கப்பட்ட 5 நிறுவனங்களில் 3 நிறுவனங்க ளிடமிருந்து மட்டும் விலைமனுக்கள் பெறப்பட்டுள்ளமை. இவை மூன்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் இரண்டு மகன்களின் நிறுவனங்களாகும்.

எனவே இதன் மூலமும் வெளிப்படைத்தன்மை, போட்டித்தன்மை ஆகியவற்றில் பாதிப்புகளை ஏற்படுத்தி முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமை போன்ற பல முறைகேடுகள் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இதனைத் தவிர சமைத்த உணவு வழங்கும் விடயத்திலும் பல்வேறு முறைகேடுகள் தற்போதும் இடம்பெற்று வருகின்றமையை கணக்காய்வுத் திணைக்களத்தின் விசாரணை அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. (ப-214)



கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு மன்னார் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்படவுள்ள நோயாளர்களுக்கு ஒரு தொகுதி பொருள்கள் வழங்கப்பட்டன. போரம் நிறுவனத்தால் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல்லிடம் இந்தப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கனகரெட்ணம் திலீபன், போரம் நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் அருந்தவராஜா நிரோஜன் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-60)

## சுகாதாரப் பரிசோதகருக்கு இடையூறு; பி. செயலக அலுவலருக்கு எச்சரிக்கை

சாவகச்சேரி மே 20

பொதுச்சுகாதார பரிசோதகரின் சேவையை இழிவுபடுத்தும் வகையில் தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்த பிரதேச செயலக அலுவலர் பொலிஸாரால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார் . இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றது. உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு சலுகையளிக்கிறீர்கள் எனவும் , வேண்டப்படாதவர்களை மட்டும் தனிமைப்படுத்துகிறீர்கள் எனவும், லஞ்சம் பெற்று தொற்று ஏற்படவில்லை என அறிவிக்கிறீர்கள் என குறித்த அலுவலர் தகாத வார்த்தைப் பிரயோகங்களால் தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்துள்ளார் எனவும் பொது சுகாதார பரிசோதகர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்திலும் தென்மராட்சி பிரதேச செயலரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த அலுவலரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிஸார் அலுவலரை எச்சரிக்கை செய்து அனுப்பினர். (ய-9)



## நகரசபை உறுப்பினர்களுக்கு நேற்று பி.சி.ஆர். சோதனை

கொடிகாமம்,மே 21

சாவகச்சேரி நகரசபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு நகரசபையில் வைத்து நேற்று பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் மற்றும் சபை உறுப்பினர் ஆகியோருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து கடந்த செவ்வாய்க் கிழமை தொடக்கம் சபையின் செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப் பட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் உறுப்பினர்கள் சுய தனிமைப் படுத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-159)

## இறுதிச் சடங்கில் திரண்டவர்களை வெளியேற்றினர் பொலிஸார்

சாவகச்சேரி,மே 21

இறுதிச் சடங்கில் அளவுக்கு அதிகமாக காணப்பட்டவர்களை பொலிஸாரும் சுகாதாரப் பகுதியினதும் இணைந்து வெளியேற்றினர்.

இந்தச் சம்பவங்கள் தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளன.

மந்துவில் மற்றும் , நாவற்குழி தச்சன்தோப்புப் பகுதிகளில் இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன.

இறுதிச் சடங்கில் குறிப்பிட்டவர்களே பங்குபற்ற அனுமதிக்கப்பட்ட நிலையில் இரு இடங்களிலும் பெருமளவானோர் பங்குபற்றியுள்ளனர் எனக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸாரும் சுகாதார பகுதியினரும் அந்தப் பகுதிகளுக்குச் சென்றனர்.

அங்கு அதிகமானோர் காணப்பட்டதால் இரத்த உறவுகள் தவிர்ந்த ஏனையோரை அங்கிருந்து வெளியேறுமாறும், இல்லையேல் அனைவரும் தனிமைப்படுத்தப்படுவீர்கள் எனவும் எச்சரிக்கை செய்ததையடுத்து அனைவரும் வெளியேறினர். (ஐ-9)

## கிளி.மருத்துவமனைக்கு கட்டில்கள் கையளிப்பு




கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு 30 கட்டில்களும்,மெத்தைகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய நெருக்கடி நிலைமைகளை கருத்திற்கொண்டுசோல்வே (Solve )அமைப்பால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. மாவட்ட மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தனிடம் இவை உத்தியோகபூர்வமாக கையளிக்கப் பட்டன. (ஐ-214)



## சுகாதாரப் பொருள்கள் முல்லையில் அன்பளிப்பு

முல்லைத்தீவு,மே 21

பிராந்திய சுகாதார பணிமனைக்கு ஒரு தொகுதி சுகாதாரப் பொருள்கள் வேள்ட் விசன் நிறுவனத்தால் வழங்கப்பட்டன.


முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வைத்து பிராந்திய சுகாதார பணிமனையிடம் இந்தப் பொருள்கள் நேற்று கையளிக்கப்பட்டன. மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலர் க.விமலநாதன், இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டு பொருள்களை வழங்கினர். (ஐ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடைத் தொழிற்சாலைகளில் தொற்று ஏற்படுமானால் பெரும் ஆபத்து நேரிடும்

## கிளி.சேவைச்சந்தை வர்த்தக சங்கத் தலைவர் சுட்டிக்காட்டு

**கிளிநொச்சி, மே 21**



**கிளிநொச்சியில் இயங்கும் ஆடைத் தொழிற்சாலைகளில் கொரோனாத் தொற்று ஏற்படுமாயின், கிளிநொச்சி முழுவதும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் எனவே இது தொடர்பில் மாவட்டச் செயலர் மற்றும் சுகாதாரத் துறையினர் கவனமெடுக்க வேண்டும் என்று கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தக சங்கத் தலைவர் இராமையா இரத்தினமணி தெரிவித்தார்.**

கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இன்று நாட்டின் நிலைமை பயங்கரமாகப் போய்க்கொண்டு இருக்கின்றது. இது சகலரும் அறிந்த விடயமே. வடமாகாணத்தில் ஏற்கனவே பிரச்சினைகள் பலவற்றை தாங்கிய மாவட்டம் கிளிநொச்சி, குறிப்பிட்ட காலப்பகுதியின் பின் எமது மக்கள் ஓரளவு மீள் எழும் போது கொரோனா எனும் நோய் தாக்கி மீண்டும் பாதாளத்தில் தள்ளி விட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பகுதியில் ஒரு ஆடைத் தொழிற்சாலையில் 300க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது. இந்த விடயம் மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். குறித்த ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களிடமிருந்து மாவட்டத்தில் தொற்றால் பெரும் ஆபத்தான நிலை ஏற்படும்.

இந்த பணியாளர்களுக்கு தொற்று ஏற்படும்வரை குறித்த நிறுவனத்தின் அதிகாரிகள் என்ன செய்தார்கள்? மாவட்டச் செயலர்,சுகாதாரத் துறையினர் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் குறித்த விடயத்தில் பொறுப்பு உண்டு என்பது அவர்கள் அறிய வேண்டிய விடயமாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் தொழில்புரியும் ஆடைத் தொழிற்சாலைகள் உள்ளன. குறித்த ஆடைத் தொழிற்சாலைகள் மாவட்டத்தின் கேந்திர பகுதியில் இயங்குகின்றன. அதனைச்சுற்றி கணிசமான பொதுமக்கள் வாழ்கின்றனர். இந்த ஆடைத் தொழிற்சாலைகளின் ஊடாக ஒரு தொற்று ஏற்படுமாயின் சுற்றி இருக்கும் சாதாரண மக்கள் பாதிக்கப்படுவர் என்பதை மாவட்டச் செயலர் மற்றும் சுகாதாரத் துறையினர் யாவரும் அறிவர்.

இந்த மாவட்டத்தில். தொற்று பரவுமாயின் அது மாவட்டத்தில் எவ்வளவு தாக்கம் செலுத்தும் என்பதை நாம் கூறி அறியும் விடயம் அல்ல.


இவ்வாறான சூழலிலும் வேலைக்கு வர வேண்டும் என கட்டாயப்படுத்தும் வகையில் நிறுவனம் ஊழியர்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றது. போக்குவரத்து தடை போடப்பட்டிருந்த நிலையில் அதிகாலை குறித்த தொழிற்சாலைக்கு ஊழியர்களை பஸ்களில் ஏற்றிச்சென்றதை நான் பார்த்துள்ளேன். இவ்வாறான பயணங்களால் பாதிப்பு இல்லையா என்பது தொடர்பில் யாரும் கவனம் செலுத்தவில்லை - என்றார். (ப-113)

---

வவுனியா

# ஆடைத் தொழிற்சாலையிலும் தொற்றாளர் கண்டறிவு

வவுனியா,மே 21



வவுனியா இராசேந்திரகுளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு பணியாற்றும் 31 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர் ஒருவருக்கு எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதிசெய்யப்பட்டது.

கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட நபர் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். குறித்த நபருடன் தொடர்புடைய 31 ஊழியர்களை சுகாதாரப் பிரிவினர் அவர்களின் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியதுடன் அவர்களிடமும் பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொண்டனர். (ஐ-18)

---



## கிளிநொச்சி இளைஞர் சேவை மன்றங்களால்

# கிளி. மருத்துவமனைக்கு 40 கட்டில்கள் கையளிப்பு

கிளிநொச்சி, மே 21

கொவிட்-19 சிகிச்சை நிலையங்களுக்காக கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றங்களால் 40 கட்டில்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

"உயிர் மூச்சைக் காக்கும் இளைஞர்கள்" எனும் தொனிப்பொருளில் கொவிட்-19 சிகிச்சை நிலையங்களுக்காக 3 ஆயிரத்து 410 கட்டில்கள் பெற்றுக் கொடுக்கும் தேசிய வேலைத்திட்டம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக நேற்றுமுன்தினம் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி பிரதேச தேசிய இளை ஞர் சேவைகள் மன்ற கழகங்களால் 40 கட்டில்கள் கிளிநொச்சி மருத்துவமனைக்கு கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வு கிளிநொச்சி இளைஞர் சேவைகள் மன்ற வளாகத்தில் இடம்பெற்றது.(ப-6)

---


# வெளிநாடுகளில் இருந்து வந்த 96 பேருக்கு தனிமை நிறைவு

யாழ்ப்பாணம், மே 21

யாழ். பாதுகாப்பு படைகளின், 52ஆவது தரைப்படைத் தலைமையகம் மற்றும் 521ஆவது காலாட் படைப்பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்ற வசாவிளான் தனிமைப்படுத்தல் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வெளிநாடுகளில் இருந்து வந்த 96 பேர் கடந்த திங்கட்கிழமை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

டுபாய், தென்கொரியா, இத்தாலி, சவூதி அரேபியா, ஓமான், கட்டார், பகரேன், ஜேர்மன், ஜோர்தான், மொசம்பிக்,அபுதாபி, லெபனான், சிங்கப்பூர் மற்றும் நிவ்கினியா ஆகிய நாடுகளிலிருந்து வந்த 96 பேரே இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்தப்படுத்தலை நிறைவு செய்து நேற்றுமுன்தினம் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ப)

---



# கிளி.யில் வெற்றிலைக் கடை உரிமையாளருக்குத் தொற்று

## 24 வெற்றிலைக் கடைகளுக்கு பூட்டு

கிளிநொச்சி, மே 21

கிளிநொச்சி சேவைச் சந்தையில் வெற்றிலை வாணிப உரிமையாளர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை அடுத்து குறித்த கடை உட்பட ஏனைய வெற்றிலைக் கடைகளையும் பூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், தொற்று நீக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

சேவைச் சந்தையின் கட்டடத் தொகுதியில் காணப்பட்ட 32 கடைகளில் 25 வெற்றிலைக் கடைகளும் 7 தேங்காய் கடைகளும் உள்ளடங்குகின்றன. வெற்றிலைக் கடை ஒன்றின் உரிமையாளர் கடந்த 6 நாள்கள் கடைக்கு சமுகமளிக்கவில்லை.

கடந்த திங்கட்கிழமை அவர் கடைக்கு வந்த போது அவருக்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. குறித்த பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனை அடுத்தே குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தவிசாளர் மேலும் தெரிவித்தார். (ப-6)

---

# ஆடைத் தொழிற்சாலை கொத்தணி பெரிய பரவலாக உருவெடுத்துள்ளது

## மக்களை அவதானமாக இருக்குமாறு மாவட்டச் செயலர் அறிவுறுத்தல்

முல்லைத்தீவு,மே 21

புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலை கொத்தணி பெரியளவில் ஒரு பரவலாக உருவெடுத்துள்ளது. எனவே இது தொடர்பில் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய பலருக்கு கொரோனத் தொற்று அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து அங்கு கடமையாற்றிய 926 பேருக்கு அன்ரிஜென் பரிசோதனை உடனடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார மருத்துவ அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க படையினர் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரி வுக்குட் பட்ட பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களின் குடும்பங்கள் கரைதுறைப்பற்று புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அதிகளவில் காணப்படுகின்றார்கள். மக்கள் இதில் கவனமாக இருக்க வேண்டும் வீடுகளை விட்டு வெளியில் வருவதை தவிர்க்க வேண்டும். இது ஒரு பெரியளவில் பரவலாக வந்துகொண்டிருக்கின்ற நிலையில் மக்கள் சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும் - என்றார். (ஐ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை வடக்கு பிரதேச செயலகம் விரைவாக தரமுயர்த்தப்பட வேண்டும்

## ஜனநாயக இளைஞர் அமைப்பு வலியுறுத்து

அம்பாறை, மே 21

**அம்பாறை கல்முனை தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையான கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்த்தல் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என ஜனநாயக இளைஞர் அமைப்பின் பொதுச்செயலாளர் கோபாலபிள்ளை மிதுஜன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

1989ஆம் ஆண்டு அப்போதைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யு.தேவநாயகத்தின் முயற்சியில் உருவாக்கப்பட்டது கல்முனை வடக்கு பிரதேச செயலகம். அப்போது இதனுடன் சேர்த்து இருபதுக்கு மேற்பட்ட உப பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டன. அவை அனைத்தும் தற்போது நிதி மற்றும் காணி அதிகாரங்களைக் கொண்ட பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளன. ஆனால் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் மட்டும் இன்னும் தரமுயர்த்தப்படாமல் நிதி மற்றும் காணி அதிகாரங்கள் அற்ற செயலகமாகக் காணப்படுகின்றது. 1993ஆம் ஆண்டில் இருந்து பிரதேச செயகமாகத் தரமுயர்த்துவதற்கான முயற்சிகள் தமிழ்த் தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இது வெறும் முயற்சியாகவே இன்று வரை காணப்படுகின்றது. இதற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது அங்குள்ள சகோதர முஸ்லிம் அரசியல்வாதிகளே ஆகும். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கல்முனை புத்திஜீவிகள் மற்றும் மக்களால் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து பல்வேறுபட்ட அரசியல்வாதிகளால் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. ஆனாலும் நிறைவேற்றப்படவில்லை. கடந்த நல்லாட்சிக் காலத்தில் கணக்காளர் நியமிக்கப்பட்டுள்ளார். இதோ வருகிறார் அதோ வருகிறார் என்றார்கள் ஒன்றும் நடக்கவில்லை. எனவே தற்போதைய அரசால் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படும் என நம்புகிறேன் -என்றார். (ப-13)

# மனிதநேயம் கொண்ட பிரதிநிதியை இழந்துள்ளோம்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி அனுதாபம்

திருமலை, மே 21

திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரெத்தினசிங்கத்தின் இறப்பின் மூலம் மனித நேயமிக்க மக்கள் பிரதிநிதி ஒருவரை நாம் இழந்து விட்டோம் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

துரைரெத்தினசிங்கம் கல்வி அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இதன் மூலம் கல்விச் சமூகத்தின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். அவரிடம் மனிதாபிமானமே மேலோங்கியிருந்தது. இதனால் இன, மத பேதமற்ற செயற்பாடுகளை அவர் முன்னெடுத்து வந்தார்.

எனக்குத் தெரிந்தவரை பல முஸ்லிம் அன்பர்கள் அவருக்கு இருந்தார்கள். அவர்களோடு மிகவும் அன்பாகப் பழகி வந்தார். குடும்ப உறவினர் போல அவர்களது சுக துக்கங்களில் பங்குபற்றி வந்ததை நான் அறிந்துள்ளேன். இன்றைய காலகட்டத்தில் இவரைப் போன்ற நல்ல பண்புள்ளவர்களை காண்பது அரிது. அதிகாரமிக்க பதவிகளை அவர் வகித்து வந்தாலும் நல்ல பண்பும் பக்குவமும் அவரிடம் நிறைந்திருந்தது. இதனால் எல்லோரையும் மனிதர்களாக அவர் பார்த்தார். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அவரது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில் பள்ளிவாசல் அபிவிருத்திக்கும் நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருந்தமையை நான் நன்கு அறிவேன்.

இனவாதமும், மதவாதமும் போசிக்கப்பட்டு வரும் இன்றைய காலத்தில் இவரது இழப்பு கவலையைத் தருகின்றது. இவரது மறைவின் மூலம் பெருங் கவலையடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு இறைவன் ஆறுதலைக் கொடுக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன் - என்றுள்ளது. (ப)

# சாவுத் தண்டனையை எதிர்கொள்ளவும் தயார்

## சபையில் ரிஷாத் உணர்ச்சிப் பேச்சு



கொழும்பு, மே 21

என்னைக் குற்றவாளி என்று நிரூபித்தால், மரண தண்டனையையும் ஏற்பதற்குத் தயாராகவுள்ளேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான் ஏதாவது குற்றம் செய்திருந்தால் என் மீது சட்ட நடவடிக்கைகளை எடுக்கலாம். என்னை 90 நாள்களுக்கு மேல் தடுத்து வைத்துள்ளனர்.

இதுவரை நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. மூன்று தடவைகள் சி.ஐ.டியினர் விசாரணை செய்தனர். நான் ஏதாவது தவறிழைத்திருந்தால் நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# அமரர் துரைரெட்ணசிங்கம் சிறந்த அரசியல் தலைவர்

## கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரோஹித இரங்கல்





திருகோணமலை, மே 21

கிழக்கின் ஒரு தலை சிறந்த அரசியல்வாதியை நாம் இழந்துள்ளோம் என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் க. துரைரெட்ணசிங்கத்தின் மறைவு குறித்து அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் உள்ளதாவது;

இலங்கை நாடாளுமன்றத்தின் அன்றைய முதல் வருகையின்போது ஒன்றாக என்னுடன் பயணித்த ஒரு சிறந்த மனிதர் துரைரெட்ணசிங்கம். இவரது ஆத்மா சாந்தியடையவும் இவரது குடும்பத்தாருக்கு உள அமைதியை பெறவும் வேண்டுகிறேன். இவரது மறைவு குறித்து கவலையடைகிறேன். ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கிறேன். இவர் தமிழ் மக்களுக்கான பிரதிநிதியல்லாமல் முழுச் சமூகத்துக்காகவும் ஒன்றிணைந்து செயற்பட்டவர். நான் கிழக்கு ஆளுநராக இருந்த போதும் என்னுடன் அவருக்கு இருந்த உறவை மறக்க முடியாது. கிழக்கு மக்கள் மத்தியில் சமூகம்சார் பிரச்சினை தொடர்பிலும் முன்வைத்து சிறந்த அரசியல் தலைமைத்துவத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்- என்றுள்ளது. (ப)

# வெளிநாடுகளுக்குச் செல்லும் பணியாளர்களுக்கு காப்புறுதி

கொழும்பு, மே 21

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களுக்கு பொருத்தமான காப்புறுதியை வழங்க, தொழில் அமைச்சர் முன்வைத்த திட்டத்துக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைவாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இந்தக் காப்புறுதியை வழங்கும்.

வெளிநாட்டுக்குப் பணிக்காகச் செல்லும் ஒருவர் இறக்க நேர்ந்தால், அதிகபட்சமாக 6 லட்சம் ரூபாவும், பணியாளர் முழுவதுமாக ஊனமுற்றால் 4 லட்சம் ரூபாவும் காப்புறுதிப் பணமாக வழங்கப்படும்.

எனினும் தொழில் ஸ்தாபனங்களில் ஏற்படும் விபத்துகள், உள மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கான மருத்துவ வசதி மற்றும் முதலாளிகளின் துன்புறுத்தல் மற்றும் கொவிட்19 காரணமாக தொழில் இழப்பு ஆகியவற்றுக்கு இந்தக் காப்புறுதி வழங்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)



# முடக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாக மீன் விநியோகம்

கொழும்பு, மே 21

பயணத்தடை அல்லது முடக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று மீன்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு, மீன்பிடி கூட்டுதாபனத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மீன்பிடி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகர இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

மக்கள் அசௌகரியம் இன்றி, சாதாரண விலைக்கு, உரிய தரத்துடனும், சுகாதார பாதுகாப்புக்களுடனும் மீன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நடவடிக்கைக்காக மீன்பிடிக் கூட்டுதாபனத்தின் நடமாடும் பிரிவு வலுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மீன்பிடிக்கூட்டுதாபனத்தின் நேரடித் தொலைபேசி இலக்கம் வழியாகத் தொடர்பு கொள்ளும் நுகர்வோர் தமக்குத் தேவையான மீன்களை முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரப் பணிப்பாளர் இல்லை மருத்துவமனையில் நெருக்கடி

**முல்லைத்தீவு, மே 21**
**முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் நிரந்தரப் பணிப்பாளர் கடமையில் இல்லாத காரணத்தால் கடந்த 13 நாள்களாக நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்துள்ளார்.**

கடந்த வருடம் ஐந்து தடவைகள் முல்லைத்தீவு பொது மருத்துவ மனையின் பணிப்பாளர்கள் இடம்மாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

தற்போது கொரோனாத் தொற்று அபாயத்தில், மாவட்டத்தின் உயிர்நாடியான முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் நிரந்தர பணிப்பாளரோ பதில் பணிப்பாளரோ பணியில் இல்லை. மருத்துவமனையின் பணிப்பாளர் கடந்த 6ஆம் திகதி இடம்மாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். மாவட்டத்தின் சுகாதாரப் பணிப்பாளரே மருத்துவமனையில் பணிப்பாளராகவும் செயற்படுகின்றார்.

எனவே மருத்துவமனைக்கு நிரந்தர அல்லது பதில் பணிப்பாளர் ஒருவரை உடனடியாக நியமித்து, மருத்துவமனையின் பணிகளை முன்னெடுப்பதற்கு வழியேற்படுத்துமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4,13)

# புளியம்பொக்கணை பகுதியில் பரவலாக கசிப்பு விற்பனை

## *கட்டுப்படுத்துமாறு மாதர் சங்கங்கள் கோரிக்கை*

கிளிநொச்சி,மே 21
கிளிநொச்சி புளியம்பொக்கணை சந்திப் பகுதியில் இடம்பெற்று வரும் கசிப்பு விற்பனையை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப் பகுதி மாதர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

சங்கங்களை சேர்ந்தோர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி புளியம்பொக்கணை சந்திப் பகுதிக்கு பெண்கள் செல்வதற்குக்கூட தற்போது அச்சம் கொள்ளும் வகையில் இச் சந்திப் பகுதி, ஒழுங்கைகளில் கசிப்பு விற்பனை அதிகமாக இடம்பெற்று வருகின்றது.

தூர இடங்களில் இருந்து எடுத்து வரப்படும் கசிப்பு புளியம் பொக்கணை சந்திப் பகுதியில் வைத்து விற்பனை செய்யப்படுகிறது.

இதன் காரணமாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் புளியம்பொக் கணை சந்திப் பகுதிக்குச் செல்வதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர்.

இவ்வாறு இடம்பெறும் கசிப்பு விற்பனையை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் என்றனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் சகல கிராமங்களிலும் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக சமூக மற்றும் குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளன என சுட்டிக்காட்டப்படுகிறது.

அத்துடன் மாவட்டச் செயலகத்தில் போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதற்கான கூட்டங்கள் நடைபெற்றாலும், கிராம மட்டங்களில் அவை இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் பலராலும் முன்வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-13)

# கலைஞர்களின் விவரங்கள் கோரல்

சண்டிலிப்பாய், மே 21
கலைஞர்களின் விவரங்கள் அடங்கிய ஒரு மென்பொருளை தாபிப்பதற்கும், இற்றைப்படுத்துவதற்கும் தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதனூடாக கலைஞர்களின் தேவைகளின் பொருட்டு அவர்களுக்கு பயன்படும் வகையிலான பெறுமதியான அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கும் பிரதேச கலைஞர்களின் திறன்களை பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையில், கலைஞர்களின் பெயர்கள் அடங்கிய ஒருபட்டியலை அறிமுகப்படுத்துவதற்கும். அதன் பாவனையை இலகுபடுத்துவதற்கும் எதிர்பாக்கப்படுவதால் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலைஞர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் இதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் சமர்பிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

# பொதுக்கூட்டம் பிற்போடல்

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் எதிர்வரும் 29 ஆம் திகதி நடத்தப்படவிருந்த பொதுச் சபை உறுப்பினர்களுக்கான கூட்டம் கொவிட் தொற்று பரவல் நிலைமை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது .

எனவே கூட்டம் நடைபெறும் திகதி பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படுமென சங்க பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (ய-9)

Digital Campus
Jaffna
OnLine Degree Programme-2020/2021
Batch I
B.Sc in Information & Communication Technology/ Computer Science.
Digital Campus இன் 2020/2021 கல்வி ஆண்டுக்காக மேலே விபரிக்கப்பட்ட பட்டப்படிப்பு கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.



Medium: Tamil/English
Eligibility for Admissions:
1) க.பொ.த (உ/த) சித்திகள் அல்லது 3 S சித்திகள்.
அனைத்து உயர்தர பிரிவினரும் விண்ணப்பிக்க முடியும்.
அல்லது
2) பட்டப்படிப்பு உயர் பீடத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகள்.
Deadline for Applications:
31-05-2021
OnLine Applications:
விண்ணப்பதாரிகள் Viber /Whats app / e-mail ஊடாக விண்ண ப்பிக்க முடியும். பெயர், விலாசம், மின்னஞ்சல் முகவரி CV உட்பட விண்ணப்பிக்கமுடியும். குறித்த பட்டதாரிப் பிரிவில் 50 மாணவர்கள் மட்டும் இணைத்துக் கொள்ளப்படுவர்.
Payment System:
விசேட புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர். கற்கைகள் யாவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரமுடையது. மாணவர்கள் ஆரம்பக் கட்டணங்கள் எதுவும் செலுத்த வேண்டிய அவசியமில்லை.
Mobile No: 0766852529
e-mail: degreeinfo08@gmail.com
Dean,
Digital Campus, Jaffna.

## கண்ணீர் அஞ்சலி

**சிவஸ்ரீ நடராஜக் குருக்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள்**

தோற்றம்
24 . 07 . 1944



மறைவு
19 . 05 . 2021

எமது ஆலயத்தில் அன்று தொட்டு இன்று வரை இறைபணி ஆற்றிவந்த எமது உருத்திர மூர்த்திக் குருக்கள் அவர்களின் மறைவினை இட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிற்பனை முருகன் ஆலய
பரிபாலன சபையினர்,
வேலணை.

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
17 . 07 . 1956



மறைவு
22 . 04 . 2021

**திருமதி நவஜோதி சரச்சந்திரன் (ரவி)**

அன்னாரின் பிரிவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் சமூக வலைத்தளங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உற்றார், உறவினர் நண்பர்களுக்கும் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (22.05.2021) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

குறிப்பு:- ஆத்மசாந்தி பிரார்த்தனை கொவிட் - 19 தொற்று காரணமாக குடும்ப அங்கத்தவர்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அன்றைய தினம் அனைவரையும் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சந்தை வீதி, உரும்பிராய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
076 683 7332

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச் சட்டம் என்மீதே முதலில் பாய்ந்தது


**வலயக்கல்வி அலுவலகம் - முல்லைத்தீவு**
**பெறுகைக்கான அழைப்பு**

**கட்டட திருத்தத்திற்கான விலைமனு கோரல் - 2021**

மேற்படி தலைப்பின் கீழ் 09.05.2021 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெறுகைக்கான அழைப்பில் குறிப்பிடப்பட்டிருந்த கீழ்வரும் கால வரையரை, நிபந்தனைகள் மாற்றி அமைக்கப் படுகின்றது.

01. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய காலப்பகுதி 10.05.2021 - 28.05.2021 வரை என குறிப்பிடப்பட்டிருந்தது, தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக 04.06.2021 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
02. இக்கேள்வி மூடுதல், திறத்தல் 31.05.2021 என குறிப்பிடப்பட்ட திகதியானது 07.06.2021ஆம் திகதி என மாற்றி அமைக்கப் படுகின்றது என்பதனை அறியத்தருகின்றேன்.
03. விண்ண ப்பிக்க தகுதியான தரம் C9 என குறிப்பிடப்பட்டது C9 and above என மாற்றியமைக்கப்படுகின்றது. இருப்பினும் உரிய தரங்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
04. விண்ண ப்பிக்க தகுதியான தரம் C8 என குறிப்பிடப்பட்டது C8 and above என மாற்றியமைக்கப்படுகின்றது.
இருப்பினும் உரிய தரங்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
வலயக்கல்வி அலுவலகம்,
முல்லைத்தீவு.


## நல்லாட்சி அரசு பழிவாங்கியது என்று சீறுகிறார் பிள்ளையான்



கொழும்பு,மே 21
நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்ததும், எனக்கு எதிராகவே பயங்கரவாதத் தடைச் சட்டம் முதலில் பாய்ந்தது. 68 நாள்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த எனக்கு, பாயும் படுக்கையும் கூட வழங்கவில்லை. அந்தளவுக்கு என்னைப் பழிவாங்கினர்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் என்கின்ற சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் கைதுகளை, அரசியல் பழிவாங்கல்கள் என்று தற்போது கூறுகின்றனர். நல்லாட்சி அரசால் நான் பழிவாங்கப்பட்டேன். அப்போது, எனக்கு எதிராக எவரும் குரல் கொடுக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கடந்த அரசின் காலப் பகுதியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கை எடுக்காது, கூட்டமைப்பின் எதிரிகளை அழிக்க, அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தியது.

என்னைப் புலிகள், சிங்கங்கள், பறவைகளென கூறிய தம்பி சாணக்கியனின் வயதும், எனது அரசியல் பொதுவாழ்க்கையும் ஒன்று. வன்முறையைக் கைவிட்டு, புலிகளிடமிருந்து நான் பிரிந்து வந்ததை உலகறியும். எனவே என்னைக் கீழ்தரமாகப் பழிவாங்குகிற செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ள வேண்டும். -என்றார். (4)


**வலயக்கல்வி அலுவலகம் - முல்லைத்தீவு**
**பெறுகைக்கான அழைப்பு**

**தளபாடம், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்கள் வழங்கல் - 2021**

மேற்படி தலைப்பின் கீழ் 09.05.2021 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெறுகைக்கான அழைப்பில் குறிப்பிடப்பட்டிருந்த கீழ்வரும் காலவரையரை மாற்றி அமைக்கப்படுகின்றது.
விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய காலப்பகுதி 10.05. 2021 - 28.05.2021 வரை என குறிப்பிடப்பட்டிருந்தது, தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக 04.06.2021 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இக்கேள்வி மூடுதல், திறத்தல் 31.05.2021 என குறிப்பிடப்பட்ட திகதியானது 07.06.2021ஆம் திகதி என மாற்றி அமைக்கப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றேன்.

தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
வலயக்கல்வி அலுவலகம்,
முல்லைத்தீவு.

**INVITATION FOR BID 2021/03**
**Regional Directorate of Health Services Jaffna**

1. The **Chairman, Regional Procurement Committee**, on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents and in the bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212227889, Fax:0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 02.30 P.M on the date mentioned in the table.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | From 28.05.2021 until 11.06.2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 02.30 P.M on 04.06.2021 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 14.06.2021 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
| NP/04/41/2021/PSDG/W/05 | Construction of Male and Female Ward at DH Varani. | 9.02 | 127 Days | C7 and C6 (Buildings) | 3,500.00 | 91,000.00 | Till 27.09.2021 |
| NP/04/41/2021/PSDG/W/06 | Construction of labour room at DH Varani | 3.99 | 97Days | C 8or C7 (Buildings) | 3,500.00 | 40,000.00 | Till 13.09.2021 |
| NP/04/41/2021/LM/W/05 | Improvement of Internal Road at Base Hosptial Tellippalai,Jaffna.. | 2.77 | 91 Days | C9 and C8 (Highways) | 1,500.00 | 30,000.00 | Till 13.08.2021 |

"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated ,09.10.2020 and 11.01.2020 respectively will also be adopted.

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,**
**Jaffna.**

**ZOOM தமிழ்**
வகுப்புக்கள்
சனி, ஞாயிறு தினங்களில்
**தரம் 6 முதல் O/L வரை ஆசிரியர் :-**
**K.KAJARUBAN BA 076 454 5709**

**தேவை**
சாரதிகள், மில் முகாமை அனுபவம் உள்ளவர்கள், மில் பணியாளர்கள் தேவை.
தொடர்புக்கு:
105, மாபியன் மில் லேன், சுதுமலை, மானிப்பாய்.
**077 77 222 15**

**கட்டட வேலை மேற்பார்வையாளர் தேவை**
வடமராட்சியிலுள்ள கட்டுமான வேலைத் தளத்தில் நேர்மை, நிர்வாகத் திறமையுள்ள மேற்பார்வையாளர் உடன் தேவை.
தொடர்பு: 078 502 9616, elankasystems@gmail.com


**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும், திறமையும் உள்ள
- மேசன்
- கூலியாட்கள்
- வெல்டர்
- தச்சுவேலைசெய்வோர்
- தொழிநுட்ப உத்தியோகத்தர் (T.O)

தேவை.
தொடர்பு:076 316 5734, 077 985 1946
e.mail: jenoshanark@gmail.com

**தவறி விட்டது**
13.05.2021 மாலை 6.30 மணியளவில் 764 வழி தடங்கல் யாழ்ப்பாணம் - வயாவிளான் பேருந்து வண்டியில் எனது **நாகலிங்கம் செல்வரத்தினம் NIC 453633128V அடையாள அட்டை, சிறிய தொகைப் பணம், வங்கி கிரடிட் காட்** ஆகியன தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் தரப்படும்.
**077 041 5642, 021 223 0830**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் ஜெகதீஸ்வரன் உமேஸ்


(உரிமையாளர் Mars Computer Center)

உயரப் பறக்க நினைத்த
உன் சிறகை இறைவன்
பாதியில் முறித்தது ஏனோ
உன்னை எண்ணி நான்
கண்ட கனவை
காலன் கற்பனை ஆக்கியது ஏனோ
என் இதயம் துடிப்பை
நிறுத்தும் வரை உன்பெயர்
சொல்லியே துடிக்கும்.

உன் நினைவோடு
முருகேசு ஜெகதீஸ்வரன் (அப்பா)
முன்னை நாள் ஊழியர்
K.C.W - K.K.S
Nakanogumi - Corp - Libya
Trans Rama - IN.C guam -USA
Sumitomo Cons, Singapore

'ராமு இல்லம்'
ஐயனார் கோவிலடி,
வண்ணை,
யாழ்ப்பாணம்.

# பணிசிறப்பு நிறைவும் 55ஆவது அகவையும்




## திரு. இராசலிங்கம் ரவிச்சந்திரன்

(சாரதி, போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்)
சேவைக்காலம் :
01.03.1989 - 21.05.2021

செய் தொழில் நேர்த்தியைச்
சிந்தனையாக்கிப்
பொய்மையை நீக்கிப்
புகழினைத் தேக்கி
ஐயனே ஆற்றலுடன்
ஆளுமை கொண்டு - இன்று
நிறைவு கண்டாய்
வாழ்க நீ பல்லாண்டு

இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்
வாழ்த்துவோர்:
நலன் விரும்பிகள்

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் திருமதி
## சோமசுந்தரம் தங்கம்மா

திதி: பூர்வ பக்க தசமி
(21.05.2021 வெள்ளிக்கிழமை)

தோற்றம்
30.06.1935

மறைவு
01.06.2020

எமைப் பிரிந்து ஓராண்டு
கடந்தாலும் என்றென்றும்
உங்களின் நீங்கா
நினைவுகளுடன் குடும்பத்தினர்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்
யாழ்ப்பாணம்

# 29ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
14 . 08 . 1943

மறைவு
23 . 04 . 2021



கடந்த 23.04.2021 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

## அமரர் திருமதி சுகிர்தவதி பரமநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.05.2021) வெள்ளிக்கிழமை காலை வில்லூன்றி தீர்த்தக்கரையில் நடைபெறும். மதியம் வீட்டுக் கிருத்திய நிகழ்வும் நடைபெறும். கொவிட் கட்டுப்பாட்டு நடைமுறையால் தங்களை மதிய போசன நிகழ்வுக்கு அழைக்க முடியாமைக்காக மனம் வருந்துகின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வம் காலமான செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் ஆறுதல் அளித்தும் வேறு பல உதவிகள் புரிந்தும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைத்து அன்பு உள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாப்பா தோட்ட வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர்
021 224 2981

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04 . 11 . 1951

மறைவு
22 . 05 . 2020



## அமரர் அருணாசலம் உமாபதி

( முன்னாள் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர் )

யாழப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டை மூளாய் வீதி, இங்கிலாந்து, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமா-கவும் கொண்ட அருணாசலம் உமாபதி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தன்னை உருக்கி பிறருக்கு ஒளிகொடுக்கும் மெழுகுவர்த்தி போல் உம்மை உருக்கி எம்மை காத்து வந்த தெய்வமே ... ஓராண்டு காலம் தான் போனாலுமே பல்லாண்டு காலங்கள்தான் வாழ்ந்தாலுமே ஆறாததே உங்களைப்பிரிந்த மனத்துயரமே! அன்பு, அறிவு, கரு ணைக்கடல் வெள்ளம் அன்னைபோல அரவணைக்கும் அருமை யான உள்ளம் இன்பத்திலும் துன்பத்திலும் ஓடிவந்து உதவும் அன்புக்கரங்கள் மன்னிக்கும் மனமும் சிரித்த முகமும் உமது சிறந்த குணங்கள்! உழைப்பை உரமாக்கி பாசமாய் பணிவிடைகள் பல செய்து வாழ்க்கை எனும் பாடத்தை எமக்குக் கற்றுத் தந்த எமது உயிர் தலைவனே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறைந்தது...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இலங்கையின் தற்போதைய நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது. இதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் வெகுவாக அதிகரித்து வரும் நிலையில் நாட்டைக் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முழுவதுமாகப் பூட்ட வேண்டும் என நான் பரிந்துரைக்கின்றேன்.

நாட்டில் நேற்று (நேற்றுமுன்தினம்) 3 ஆயிரத்து 500 க்கும் அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். எனவே, இதனைப் போன்று மூன்று மடங்கான தொற்றாளர்கள் நாட்டில் இருப்பார்கள்.

அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த மற்றைய நேரங்களில் மக்களை வீட்டில் இருக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் மக்கள் அவ்வாறு நடந்து கொள்வதில்லை. நாட்டில் அதிகரிக்கும் கொரோனா மரணங்கள் மற்றும் தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் வீதிகள் வெறுமையடைய வேண்டும்.

அரச அதிகாரிகள் அரசின் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப பணியாற்ற வேண்டும். கொரோனாத் தொற்று நிலவரங்கள் குறித்த உண்மைத் தகவல்களை மறைக்க முயன்றால் நாமும் அதனுடன் சேர்ந்து மறைத்து விட நேரிடும்' என்றார். (ம-22)

## தொடர்ச்சியாக...

மருத்துவ நிபுணர்களுடன் நேற்று நடைபெற்ற சிறப்புக் கலந்துரையாடலின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த சில வாரங்களாகவே நாட்டை முடக்க வேண்டும் என்ற கோரிக்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## துறைமுக...

ருந்த கொழும்புத் துறைமுக நகரத்தின் விசேட பொருளாதார வலய ஆணைக்குழு சட்டவரைவு, நாடாளுமன்றத்தில் 148 வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

சட்டவரைவு தொடர்பான விவாதங்கள் நேற்றுமுன்தினமும் நேற்றும் நடைபெற்ற நிலையில், விவாதத்தின் இறுதியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது சட்டவரைவுக்கு ஆதரவாக 148 பேரும் எதிராக 59 பேரும் வாக்களித்தனர். இதில் ஆளும் கட்சியினர் ஆதரவாக வாக்களித்ததுடன், எதிராக ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

கொழும்புத் துறைமுக நகர விசேட பொருளாதார வலய ஆணைக்குழு சட்டவரைவில் சில விடயங்கள் அரசமைப்புக்கு முரணானவை எனவும், இதனால் அவற்றை நிறைவேற்ற வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் எனவும் உயர்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனை ஏற்றுக்கொண்ட அரசு, சர்வஜன வாக்கெடுப்புக்கான விடயங்களைத் தவிர்ந்த மற்றைய விடயங்களை திருத்திவிட்டு, சாதாரண பெரும்பான்மை வாக்குகளுடன் அதை நிறைவேற்றியுள்ளது. (ம-22)

## ஆடைத்தொழிற்சாலை...

தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் 4 பேர் கர்ப்பிணித் தாய்மார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் ஒருவர் கிளிநொச்சி கிருஸ்ணபுரம் கொரோனா இடைத்தங்கல் நிலையத்திலும், மாங்குளம் மருத்துவமனையில் இருவரும், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒருவருமாகச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட 36 வாரங்கள் நிரம்பிய கர்ப்பிணித் தாய் ஒருவர் மருத்துவமனைக்கு நீண்ட இழுபறியின் பின்னரே அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு வாகன வசதிகள் எதுவும் இல்லாமல் திண்டாடிய நிலையில் நேற்றுக்காலை 5 மணிக்கே மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

## சிதைந்த...

இது கொலையாக இருக்கலாம் என்று ஆரம்பத்தில் சந்தேகம் வெளிப்படுத்தப்பட்ட போதிலும், பின்னர் மறைகாணி காணொலிகளை வைத்துப் பார்த்ததில் குறித்த நபர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தமை தெரியவந்தது. சடலத்துக்கு அருகில், மண்ணெண்ணெய் கொள்கலன் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. (ம-26)

## கொரோனா....

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு மருத்துவமனைகளை தயார்ப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

வடக்கில் ஒவ்வொரு மாவட்டங்களினதும் மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் ஆதார மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சை விடுதிகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் இதுவரை கொரோனா சிகிச்சை விடுதி ஆரம்பிக்கப்படவில்லை. அந்த விடுதியை ஆரம்பிப்பதற்கு அடிப்படை உபகரணங்களிலிருந்து பல தேவை என்று மாவட்ட மருத்துவமனை பட்டியல் படுத்தியுள்ளது. (ஓ.5)

## பொன்னாலையில்...

பட்ட மரக்கன்று பிடுங்கி எறியப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கைக்கு அளவான மரக்கன்றுகளை தாயகம் முழுவதும் நடுகை செய்யும் திட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த மரக்கன்று நடப்பட்டது.

நூற்றாண்டு காலம் நிலைத்துநின்று நிழல் பரப்பக்கூடிய ஆலமரக்கன்று பெரும் சிரமத்தின் மத்தியில் கொண்டு வரப்பட்டு பொன்னாலை சந்திக்கு சமீபமாக நடப்பட்டது. உடனடியாகவே கூடும் அமைக்கப்பட்டது.

எனினும், இனந்தெரியாத நபர்கள் இந்த மரக்கன்றை பிடுங்கி அழித்துள்ளதுடன் இதற்கு அமைக்கப்பட்ட கூட்டையும் பற்றைக்குள் வீசி கேவலமான செயலைச் செய்துள்ளனர்.

இறந்த இலட்சக்கணக்கான ஆத்மாக்களின் நினைவாக நடப்பட்ட இந்த மரக்கன்றை பிடுங்கியமை மிகக் கீழ்த்தரமான செயற்பாடாகும். மனித நேயம் என்றால் என்ன எனத் தெரியாத காட்டுமிராண்டிகளே இந்தச் செயலைச் செய்திருப்பர் என மரக்கன்றை நடுகை செய்த செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் செயலுக்கு வன்மையான கண்டனத்தையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர். (ம-26)

## கொவிட் தொற்று...

பெற்றுவந்த அவர், சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

அவரது உடலில் மாதிரிகள் பெறப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருந்தன. பி.சி.ஆர். முடிவுகள் நேற்று கிடைத்த நிலையில் பிரதம குருவுக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. (எ-26)

## கொரோனாவால்...

பெண்ணொருவர் நேற்று உயிரிழந்தார்.

சுகவீனம் காரணமாக அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து வவுனியா மருத்துவமனையின் கொரோனா விடுதியில் அவர் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் உயிரிழந்தார். (ம-110)

## தொற்று நேற்று...

3 ஆயிரத்து 441 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 54 ஆயிரத்து 784ஆக எகிறியுள்ளது. கொரோனாத் தொற்றுடன் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 201ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 532ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

## கொரோனா வடக்கில்...

என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் ஆயிரத்து 272 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 77 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 62 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 6 பேரும் வவுனியா மாவட்டத்தில் 6 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பேரும் மன்னார் மாவட்டத்தில் ஒருவரும் என 77 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியா பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூவருக்கும் செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கும் கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூவருக்கும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் ஊர்காவற்றுறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் மானிப்பாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தொற்றாளர்களுடன் முதல் நிலை தொடர்பைப் பேணினர் என்று சுயதனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்ட 31 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வருக்கும், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 4 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ம-26)

## சட்டத்தை மீறி ஆர்ப்பாட்டம் ஜே.வி.பிக்கு எதிராக வழக்கு

கொழும்பு,மே 21

நாடாளுமன்றச் சுற்று வட்டப் பகுதியில், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியமைக்கு எதிராக, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. அதில் சுமார் 150 பேர் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நடத்தப்பட்டுள்ளது என்று வெலிக்கடைப் பொலிஸார், நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள பி அறிக்கையில் தெரிவித்துள்ளனர். இதையடுத்து ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

## ஆலயம் உடைப்பு

முல்லைத்தீவு,மே 21

முல்லைத்தீவு துணுக்காய் ஆரோக்கியபுரம் கிராமத்தில் உள்ள இந்து ஆலயம் ஒன்று இனம் தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தில் உள்ள படங்கள் நொருக்கப்பட்டுள்ளதுடன், கட்டடங்களுக்கும் சேதங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகத்தால் அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஜ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையும், முண்டமும் வேறாக்கப்பட்ட சடலம்

கொழும்பு,மே 21

வீதியோரத்தில் தலையும், முண்டமும் வேறாக்கப்பட்ட நிலையில் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. எஹலியகொட மின்னான பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வீதியோரத்தில் காணப்பட்ட தலையில்லாத சடலத்தையும், குறித்த இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் புதர்களுக்குள் பையொன்றுக்குள் சுற்றப்பட்டிருந்த தலையையும் பொலிஸார் மீட்டனர்.

பொலிஸாரின் மேலதிக விசாரணைகளில் அந்தச் சடலம் கலப்பிட்டமட பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவருடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த இளைஞர் கொலைக்குற்றம் தொடர்பான வழக்கொன்றில் தொடர்புபட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை எஹலியகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ-4)

# வவுனியாவில் 12 பெண்கள் உட்பட 20 பேருக்கு கொரோனாத் தொற்று!

வவுனியா, மே 21

**வவுனியா - கிராமப் புறங்களில் 12 பெண்கள் உட்பட 20 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யபட்டுள்ளது.**




வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மற்றும் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின.

அதில், மாமடு பகுதியில் மூன்று பேருக்கும், சின்னப்புதுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், காத்தார் சின்னக்குளம் பகுதியில் இருவருக்கும், ஓமந்தை நவ்வி பகுதியில் நான்கு பேருக்கும், சூடுவெந்த புலவு பகுதியில் ஒருவருக்கும், மூன்றுமுறிப்பு பகுதியில் ஒருவருக்கும், கோதாண்டார் நொச்சிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், நெடுங்கேணி பகுதியில் இருவருக்கும், கல்மடு முள்ளிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், சிறிராமபுரம் பகுதியில் ஒருவருக்கும், பூவரசன் குளம் பகுதியில் ஒருவருக்கும், புளியங்குளம் பகுதியில் இருவருக்கும் என கிராமங்களைச் சேர்ந்த 12 பெண்கள் உட்பட 20 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-18)





# தேசிய படை வீரர் தின நிகழ்வுகள் கொழும்பில்

கொழும்பு, மே 21

இலங்கையின் தேசிய படை வீரர்கள் தின நிகழ்வு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் பத்திரமுல்ல நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு அருகில் உள்ள நினைவுத் தூபிக்கு அருகே நடைபெற்றது.

ஜனாதிபதி, பிரதமர் , முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன , சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் உட்பட அமைச்சர்கள், பாதுகாப்புச் செயலாளர் தலைமையிலான முப்படை தளபதிகள், பொலிஸ்மா அதிபர், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், படையினர் மற்றும் படையினரின் குடும்ப உறுப்பினர்கள் நினைவுத் தூபிக்கு மலர் வலயங்களை வைத்து மரியாதை செலுத்தினர். (எ-இ)

# பேரறிவாளனுக்கு கிடைத்தது 30 நாள்கள் சுதந்திரக் காற்று

சென்னை, மே 21

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதியாக சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள பேரறிவாளனுக்கு 30 நாள்கள் சாதாரண விடுப்பு வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக, தமிழக அரசு நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்:

அவர் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவருக்கு உயர் நீதிமன்றம் பல முறை பரோல் தந்துள்ளது. உச்ச நீதிமன்றமும் பரோல் வழங்கியுள்ளது.

தற்போது பேரறிவாளன் விடுதலை கோரும் மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் உள்ளது.

இந்த நிலையில், நாடெங்கும் கொரோனா இரண்டாவது பரவல் அலை அதிகரித்துள்ளது. நாடு முழுவதும் முடக்கத்தை ஏற்படுத்திய பெருந்தொற்றால் சிறைக்கைதிகள் பாதிக்கப்படாமல் இருக்கத் தேவைப்படின் பரோல் வழங்கவும் கோரிக்கை வலுத்து வருகிறது.

பேரறிவாளன் நீரிழிவு மற்றும் சிறுநீரக நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்குத் தொற்று எளிதில் பரவும் அபாயம் உள்ளது. பேரறிவாளன் நிலையைக் கருத்தில் கொண்டும், அவரது உடல்நிலை மற்றும் கொரோனா பரவலைக் கருத்தில் கொண்டும் அவருக்கு நீண்ட விடுப்பு வழங்கிட வேண்டும் என, அவரது தாயார் அற்புதம்மாள் நேற்றுமுன்தினம் முதல்வர் ஸ்டாலினுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் அவருக்கு 30 நாள்கள் சாதாரண விடுப்பு வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.(து-இ)

# குடிவரவு, குடியகழ்வு அலுவலகங்கள் பூட்டு

கொழும்பு, மே 21

குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.

எனினும் அத்தியாவசிய தேவைகளுக்காக கடமை நாள்களில் காலை 8 மணி முதல் மாலை 4.30 மணி வரை தொலைபேசி இலக்கத்தின் மூலமோ அல்லது மின்னஞ்சல் முகவரி மூலமோ தொடர்பு கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

Computer Training Online
Basic, Web Development, Software Project Training
074 138 3368

திருமண சேவை
புதிய திருமண இணைய தளம்
நோர்வே. பதிவு இலவசம்
31.05 .2021 வரை
(இலங்கை வாழ் மக்களுக்கு)
www.fix2.no 076 555 6479

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும்.
(யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100m தூரம்)
தொடர்பு:
076 221 2037
077 2036 402

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
யாழ் நகரிலிருந்து 1½ km தூரம்
(பரப்பின் விலை 6 லட்சம் ரூபா)
தொடர்பு:077 288 0152, 077 235 2656
074 075 4204

பல்கலைக்கழக அனுமதி படிவம்
புதிய கல்வியாண்டுக்கான (2020 - 2021) படிவம் இன்று (21.05.2021) வெள்ளிக்கிழமை நண்பகலி லிருந்து தொடர்ச்சியாக விநியோகம் செய்யப்படும் தேவைக்கு அதிகமாக படிவம் கையிருப்பில் உண்டு மாணவர்கள் சமூக இடைவெளியினை மதித்து எமது இரண்டு விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
விலை 500/-
பூபாலசிங்கம் புத்தகசாலை
41, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 6693
212, வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம். 021 222 1637

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.